Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 மார்கழி 04 ஹிஜ்ரி 1428 துல்கதா 15 (18.12.2005) ஞாயிற்றுக்கிழமை இதழ் 79

# ஆசிய நாடொன்றில் பேச்சு நடத்தும் யோசனையைப் புலிகள் நிராகரிப்பு!



கிளிநொச்சி

**ஆசிய நாடொன்றில் பேச்சுக்களை நடத்தலாம் என்று இலங்கை அரசாங்கம் முன்வைத்த யோசனையை விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ளனர்.**

**முதற்கட்டப் பேச்சுக்கள் நோர்வேயில் நடத்தப்படவேண்டும் என்ற தமது நிலைப் பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என்று நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.**

**சமாதான செயலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -**

ஆசிய நாடொன்றில் பேச்சு நடத்துவது தொடர்பாக அரசாங் கம் அழைப்பு விடுத்துள்ளது.

எமது தலைமைப்பீடத்தின் நிலைப்பாடு பற்றி நாங்கள் ஏற்கனவே நோர்வே அனுசரணையாளர் ஊடாகத் தெரிவித் திருக்கிறோம். தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாட் டில் எவ்வித மாற்றமும் இல்லை.

நாங்கள் பேச்சுக்கு ஒருபோதும் தடையாக இருக்கப் போவ தில்லை. அனைத்துக்கும் அடிப்படையாகவுள்ள போர்நிறுத்த ஒப்பந்தம் சீர்குலைந்து போகும் நிலையிலுள்ளது. ஆகவே, போர்நிறுத்த உடன்பாட்டை அமுலாக்குவதற்கான பேச்சுக் களை உடனடியாகத் தொடங்கவேண்டும் என்பதில் நாம் உறுதியான நிலைப்பாடு கொண்டுள்ளோம்.

இந்தப் பேச்சுக்கள் ஐரோப்பிய நாடொன்றில் - குறிப் பாக அனுசரணையாளராக உள்ள (02 ஆம் பக்கம் பார்க்க)

# புங்குடுதீவில் கடற்படை வெறித்தனம்; யுவதி வல்லுறவுக்குட்படுத்தி கொலை!

யாழ்ப்பாணம்

கடற்படையினரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டதாகக் கருதப்படும் இளம் பெண் ஒருவரின் சடலம், புங்குடு தீவு கடற்படை முகாம் அருகிலுள்ள கிணற்றினுள் கண்டுபிடிக்கப்பட்டது.

புங்குடுதீவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கும் இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

புங்குடுதீவு ஏழாம் வட்டாரம் மடத்துவெளியைச் சேர்ந்த இளைய தம்பி தர்சினி (வயது 20) என்ற பெண்ணே கடற்படையினரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டதாகத் தெரிவிக் கப்படுகிறது.

மேற்படி இளம்பெண் தினமும் தனது வீட்டிலிருந்து 300 மீற்றர் தொலைவிலுள்ள பெரியதாயாரின் வீட்டுக்குச் சென்று படுப்பது வழக்கம்

நேற்றுமுன்தினமும் இரவு 7.00 மணியளவில் வழக்கம்போலவே இவர் தனது வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றபோது அருகிலுள்ள பாரிய கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படையினர் இவரை இழுத்துச் சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய பின்னர் படுகொலை செய்து சடலத்தை கிணற்றுள் வீசியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக்காலை தனது மகள் வீட்டுக்குத் திரும்பி வராத நிலையில் தாயார் உறவினர்களுடன் இணைந்து தேடுதல் நடத்தியபோதே கடற் படை முகாமுக்கும், கடற்படையினரின் மக்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

# அன்னையர் முன்னணி வன்மையாக கண்டனம்!

யாழ்ப்பாணம்

புங்குடுதீவு பகுதியில் நேற்றுமுன்தினமிரவு 7 மணியளவில் தனது வீட்டிலிருந்து உறவினர் வீட்டிற்குச் சென்றுகொண்டிருந்த இளம் யுவ தியை, கடற்படைச் சிப்பாய்கள் ஆயுத முனை யில் சுற்றிவளைத்து இழுத்துச்சென்று மிகக் கொடூரமான முறையில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியபின் படுகொலை செய்து கிணற்றி னுள் சடலத்தை வீசிய சம்பவத்தை - யாழ். மாவட்ட அன்னையர் முன்னணி வன்மையா கக் கண்டித்து அறிக்கையொன்றை வெளியிட் டுள்ளது.

இந்தக் கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள (12 ஆம் பக்கம் பார்க்க)

# கெருடாவில் பகுதியில் படையினர் வாகனங்களை மறித்து சோதனை!

# தமிழ்ச்செல்வன் - ஆறுமுகன் சந்திப்பு!

கிளிநொச்சி

# கெருடாவில் பகுதியில் படையினர் வாகனங்களை மறித்து சோதனை!

யாழ்ப்பாணம்

போக்குவரத்தில் ஈடுபட்ட வாகனங் களை படையினர் நேற்று தொண்டமனாறு கெருடாவில் சந்தியில்வைத்து திடீர் சோதனைக்குட்படுத்தினர்.

தொண்டமனாறு - கெருடாவில் சந்தியில்வைத்து யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி வழியாக போக்குவரத்தில் ஈடுபட்டிருந்த சகல வாகனங்களும் நீண்டநேரமாக நிறுத்திவைக்கப்பட்டு படையினரால் சோதனையிடப்பட்டன.

பயணிகளை ஏற்றிக்கொண்டு வந்த தனியார், அரச வாகனங்களை சோதனையிட்ட படையினர், பயணிகளை ஒவ்வொருவராக உடல் சோதனைக்குட்படுத்தியதுடன் அவர்களிடமிருந்த பயணப்பை உள்ளிட்ட அனைத்துப் பொருட்களையும் சோதனைக்குட்படுத்தினர். சாரதிகளும், நடத்துனர்களும் சோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

படையினரின் இந்தத் திடீர் சோதனை நடவடிக்கையால் அந்த வீதியால் பயணித்த வாகனங்கள் அனைத்தும் நீண்டநேரம் (12 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்ச்செல்வன் - ஆறுமுகன் சந்திப்பு!

கிளிநொச்சி


இலங்கைத் தீவிலுள்ள தமிழர்கள் முழுமையாக மானத்தோடும், மரியாதையோடும், வாழவேண்டுமெனில் அனைத்துத் தமிழ்க் கட்சிகளுக்கிடையேயும் ஒற்றுமை அவசியம் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்றுக்காலை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்றுக்காலை 11.17 மணியளவில் கிளிநொச்சிக்கு வந்த ஆறுமுகம் தொண்டமானை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் வர வேற்றார் (12 ஆம் பக்கம் பார்க்க)



# வட-கிழக்கு பிரதேசத்தை சூறாவளி தாக்கும் ஆபத்து!



கொழும்பு

வங்கக் கடலில் உருவாகியுள்ள புயல் இன்று காலை திருகோணமலைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடைப்பட்ட பகுதியைத் தாக்கக்கூடும் என்றும் - இதனால் மணிக்கு 80 - 100 கிலோ மீற்றர் வேகத்தில் சூறைக்காற்றுடன் கடும் மழை பெய்யும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

கிழக்குப் பிராந்தியக் கடலில் நிலைகொண்டுள்ள தாழமுக்கமானது நேற்றுக்காலை 9 மணிக்கு மட்டக்களப்பில் இருந்து கிழக்குத் திசையாக 200 - 250 கிலோ (12 ஆம் பக்கம் பார்க்க)

# அரசு - ஐ.தே.க. இணைந்து செயற்பட இந்திய அரசாங்கம் கடும் அழுத்தம்!

கொழும்பு

இலங்கையில் தடைப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுக்களைத் தொடர்ந்து முன்னெடுக்கும் வகையில் - அரசாங்கமும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து செயற்படவேண்டும் என இந்தியா அழுத்தம் கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

பல்வேறு அரசியல் காரணங்களால் தடைப்பட்டுள்ள சமாதான முயற்சியைத் தொடரவைப்பதற்கான நடவடிக்கையில் இந்தியா ஈடுபட்டுள்ளதாக கொழும்பிலுள்ள தூதரகத் தகவல்கள் தெரிவித்தன.

இலங்கை அரசு மற்றும் ஐ.தே. கட்சியை சமாதான முயற்சிகளில் பொது இணக்கப்பாட்டுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சியில் இந்தியா ஈடுபட்டுள்ளது. இதற்காக ஜனாதிபதி மகிந்தவையும் எதிர்க்கட்சித் தலை வர் ரணில் விக்கிரமசிங்கவையும் இந்தியாவுக்கு வருமாறு இந்திய அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுத்துள்ளது.

இதனையடுத்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 27 ஆம் திகதியும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் (12 ஆம் பக்கம் பார்க்க)

APC ஆனந்தா பிறைவேற் கிளினிக்
எமது சேவைகள் 1. ஈ.சி.ஜி 2. அவசர முதலுதவி சிகிச்சைப் பிரிவு 3. வாட் 4. போக்குவரத்துச்சேவை [நோயாளிகளுக்கு]
(C/4385)
173, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-222 8144
ஆலோசனை நேரம்:
(திங்கள் - சனி) காலை 6.00 முதல் இரவு 9.00 வரை
ஞாயிறு காலை 6.00 முதல் காலை 10.00 வரை
மாலை 5.00 முதல் இரவு 9.00 வரை



# ஆசிய நாடொன்றில் பேச்சு நடத்தும் யோசனையை...

நோர்வேயில் முதற்கட்டப் பேச்சுக்களைத் தொடங்கலாம் என்பது எமது கடந்தகால நிலைப்பாடு. அந்த நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை.

ஆசிய நாடுகளில் ஒன்றில்தான் பேச்சுக்கள் நடைபெறவேண்டும் என்றும் - விடுதலைப் புலிகளை ஐரோப்பிய நாடுகள் தடைசெய்ய வேண்டும் என்றும் - கடுமையான நிலையை மேற்கொள்ள வேண்டுமென்றும் அரசு கூறிவருவது ஒரு சதிமுயற்சிதான்.

அனுசரணையாளராக நோர்வேயும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் நோர்டிக் நாடுகளும் அங்கத்துவர்களாக இருக்கின்றனர். ஐரோப்பிய நாடுகளின் ஈடுபாட்டோடும், பங்களிப்போடும்தான் இந்த சமாதான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இந்தச் சூழலில் ஐரோப்பிய நாடுகளைப் புறந்தள்ளிவிட்டு, ஆசிய நாடுகளில் பேச்சுக்கள் நடத்தவேண்டும் என்றும், கண்காணிப்பாளர்களாக, அனுசரணையாளர்களாக ஐரோப்பிய நாடுகள் பங்கேற்க வேண்டும் என்ற குழப்பமான நிலைப்பாட்டை நாம் ஏற்க முடியாது.

நோர்வே அனுசரணையாளர்களுடன்தான் பேச்சுக்கள் முன்னெடுக் கப்படவேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம். போர்நிறுத்த உடன்பாட்டை அமுல்படுத்துவது தொடர்பாக இருதரப்பு உயர்நிலைக் குழுக்கள் உடனடியாகச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தவேண்டும். செயலிழந்து போகும் - சீர்குலைந்து போகும் இந்தப் போர்நிறுத்த உடன்பாட்டை வலுப்படுத்தும் பேச்சுக்கள் உடனடியாகத் தொடங்கப்பட வேண்டும்.

பேச்சுக்கள் மட்டுமல்ல, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். முழு அளவில் நம்பிக்கையிழந்து போயிருக்கும் மக்களுக்கு ஓரளவேனும் நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் செயற்பாடுகளில் உடனடியாக இறங்குவதன் மூலம்தான் இன்றைய நிலையை ஓரளவுக்கேனும் சீர்செய்ய முடியும்.

இந்த அடிப்படையில் போர்நிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான பேச்சுக்கள் உடனடியாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதில் - ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக நோர்வேயில் முதல் கட்டப் பேச்சுக்களைத் தொடங்க வேண்டும் என்பதிலும் நாம் உறுதியாகவுள்ளோம்.

ஏற்கனவே எமது நிலைப்பாட்டை நாம் தெளிவுபடுத்தியிருக்கிறோம். இந்த நிலையில் இப்படியான அறிவிப்புக்களை அரசாங்கம் விடுத்துக் கொண்டிருப்பது, இதயசுத்தியோடுதான் அவர்கள் அறிவிப்புக்களை வெளியிடுகிறார்களா என்ற கேள்வியை எழுப்புகிறது.

விடுதலைப் புலிகளைத் தடை செய்யவேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியத்திடம் அரசாங்கம் கோரிவருவதாக செய்திகள் கசிந்துள்ளன.

எனவே, ஆசிய நாடுகளில் பேச்சு என்பது அரசாங்கத்தின் ஒரு சதி முயற்சி. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது மக்கள் கணிசமான அளவில் ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்து வருகிறார்கள். இந்த நிலையில், சர்வதேச சமூகத்துக்கும் எமக்குமான உறவைத் துண்டித்து எம்மைத் தனிமைப்படுத்தும் ஒரு சதிமுயற்சிதான் அரசாங்கத்தின் இந்த அறிவிப்பு.

பேச்சுவார்த்தையில் உண்மையான, இதயபூர்வமான அக்கறையிருந்தால் இப்படியான நிலைப்பாட்டை இவர்கள் அறிவிக்கவேண்டிய தேவையில்லை. ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட பல நாடுகளில் இந்தப் பேச்சுக்கள் நடைபெற்றிருக்கும் நிலையில் ஆசிய நாடுகளில் பேச்சு என்று அரசாங்கம் தெரிவித்திருப்பது பேச்சுக்களை இழுத்தடிக்க அரசாங்கம் மேற்கொள்ளும் தந்திரோபாயமோ என்ற கேள்வி எமக்கு எழுகின்றது.

கேள்வி: பேச்சுக்கு வருமாறு அரசாங்கத்திடமிருந்து அழைப்பு வந்திருக்கிறது. இதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா? நிராகரிக்கின்றீர்களா?

பதில்: அரசிடமிருந்து அழைப்பு வருவதற்கு முன்னர் நாங்களே பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்திருந்தோம். போர் நிறுத்த உடன்பாட்டைச் செம்மையாகப் பேணுவதன் மூலமாக நம்பிக்கைகளைக் கட்டியெழுப்பி, மீண்டும் சமாதானச் சூழலை உறுதியாக்கிக் கொள்வதற்கு இரு தரப்பு உயர்மட்டக் குழுவும் சந்தித்துப் பேச வேண்டுமென்பது எமது நீண்ட காலக் கோரிக்கை. அரச தரப்பிடமிருந்து தற்போது இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளதை நாங்கள் ஏற்கின்றோம்.

இந்த அறிவிப்பானது - இதய சுத்தியுடனான, உண்மையான அறிவிப்பாக இருக்கவேண்டும் என்பதுதான் இன்றைய எமது நிலைப்பாடு. ஏனெனில், ஆசிய நாடுகளில்தான் பேச்சுவார்த்தை இடம்பெறவேண்டும் என்று நிபந்தனைகளைப் போடுவது என்பது காலத்தை இழுத்தடிக்கும் செயலாகத்தான் எம்மால் உணரமுடிகின்றது.

*கேள்வி :* இணைத்தலைமை நாடுகளில் மாற்றங்கள் ஏற்படக் கூடிய சூழலில் அரசின் அழைப்பை எப்படிப் பார்க்கிறீர்கள்?

*பதில் :* இரட்டை வேடம் போடும் இந்தப் போக்கை நாம் அனுமதிக்க முடியாது. ஒரு புறம் அமைதி முயற்சிகளைத் தொடரத் தயாராகியிருப்பதாகக் காட்டிக்கொண்டு, இன்னொரு புறம் தமிழர் தரப்பை பலவீனப்படுத்தும் முயற்சிகளில் தீவிரமாக அரசாங்கம் இறங்கியிருப்பது எமக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது.

புலிகளை ஐரோப்பிய நாடுகள் தடைசெய்ய வேண்டும் என்றும், பேச்சுவார்த்தைகளை ஆசிய நாடுகளில் நடத்த வேண்டும் என்பதும், சர்வதேச பிரதிநிதிகள், இராஜதந்திரிகளின் கருத்துக்களைத் தடுப்பதும் - எல்லாவற்றையும் ஒட்டு மொத்தமாகப் பார்க்கின்றபோது - அரசாங்கம் ஒரு இதய சுத்தியுடனான, நேர்மையான போக்கை எடுக்கவில்லை என்பதைத்தான் உணரமுடிகிறது.

அரசாங்கம் தனது போக்கை மாற்றியமைக்க வேண்டும். சர்வதேச சமூகத்துடன் தமிழர் தரப்பின் உறவை வலுப்படுத்த அரசாங்கம் தடையாக இருக்கக்கூடாது. சர்வதேச சமூகம்கூட இதனைப் புரிந்துகொள்ள வேண்டும். சர்வதேசம் நடுநிலைப்பாடு, அமைதி முயற்சிகளுக்கான ஆதரவு தமிழர் தரப்பை நம்பிக்கை கொள்ளவைத்தது.

தற்போதுள்ள நிலைப்பாட்டைத் தகர்த்தெறிவதால், சமாதான முயற்சிகள் அனைத்தையும் இல்லாது ஒழிக்கின்ற செயலாக அரசின் நிலைப்பாட்டைப் பார்க்க வேண்டியுள்ளது.

*கேள்வி:* ஆறுமுகம் தொண்டமானுடனான சந்திப்புத் தொடர்பாக...?

*பதில்:* இந்தச் சந்திப்பானது மலையக தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எங்களுடன் சந்திக்கக் கோரியதற்கு இணங்க நடைபெற்றது.

நீண்ட நேரமாக கலந்துரையாடினோம். பல பிரச்சினைகள் தொடர்பாக விவாதித்தோம். முக்கியமாக தமிழ்மக்கள் அனைவரும் ஒன்றுபட்டிருக்கவேண்டுமானால், ஒற்றுமையுடன் செயற்படவேண்டும் என்பதே அவர்களுடைய நிலைப்பாடாக இருந்தது.

நானும் சில விடயங்களைத் தெளிவாக எடுத்துக் கூறினேன். எமது தலைவர் பல சந்திப்புக்களின்போது தமிழ்க் கட்சிகள், மலையகக் கட்சிகளுடனான சந்திப்புக்களின்போதும் இதனையே தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளார். அந்த வகையில் நீங்கள் இப்படியானதொரு நிலைப்பாட்டை எடுப்பதை நாங்கள் வரவேற்கிறோம்.

எமது பூரணமான ஆதரவை நிச்சயமாகத் தருவோம். அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படுவதும் - தமிழ்மக்களுக்கு எந்தெந்த பிரதேசங்களில் அச்சுறுத்தல் வருகின்றதோ அல்லாவிட்டால் தமிழ்மக்களுக்காக குரலெழுப்ப நேர்கின்றதோ அந்த நேரத்தில் அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் இணைந்து செயற்படுகின்ற சூழல் உருவாகவேண்டும். அதனை நாங்கள் எப்போதும் வரவேற்போம். எப்போதும் எங்கள் ஆதரவும் ஒத்துழைப்பும் இருக்கும். இந்த முயற்சிகளை எமது மக்களும் வரவேற்பார்கள்.

எமது தலைவரும் மிகுந்த எதிர்பார்ப்போடு இருந்தவர். அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஒருங்கிணைந்து தமிழ்மக்களுடைய பிரச்சினைகளில் இணைந்து செயற்படவேண்டும் என்பது அவருடைய எதிர்பார்ப்பு.

அந்தவகையில், இந்தச் சந்திப்பு ஆக்கபூர்வமாகவும், வெளிப்படையாகவும் அமைந்தது. எதிர்காலத்தில் ஆக்கபூர்வமான விளைவுகள் ஏற்படும் என்றே நம்புகிறேன்.

கேள்வி: முஸ்லிம் கட்சிகளையும் இதற்குள் உள்ளடக்குவீர்களா?

பதில்: ஒன்றிணைந்து ஒற்றுமையுடன் செயற்பட - ஒரு இலட்சியத்தின் கீழ் செயற்பட தயாராகவுள்ளோம். நாங்கள் இணைந்து செயற்படுவதற்கு எதிரானவர்கள் அல்லர். தமிழ் பேசும் மக்களுடைய எதிர்காலம் தொடர்பாக ஒன்றிணைந்து செயற்பட எவர் வருகின்றார்களோ நாங்கள் அவர்களையெல்லாம் வரவேற்போம். இணைந்து செயற்படுவதற்கு எங்களுடைய பூரண ஆதரவையும் வழங்குவோம்.

கேள்வி: தலைவர் பிரபாகரனை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் சந்திக்கவிருப்பதாகக் கூறியிருக்கின்றாரே....?

பதில்: பத்திரிகை அறிக்கைகள் மட்டும் நல்லுறவை, சந்திப்பை ஏற்படுத்தாது. சந்திப்புக்கான உண்மையான முயற்சிகளை எடுக்கவேண்டும். உண்மையான முயற்சிகள்தான் ஆக்கபூர்வமான விளைவுகளைத் தரும்.

*கேள்வி :* இலங்கை இராணு வத்துக்கு இந்தியாவின் இராணுவ உதவிகள் தொடர்பாக....?

*பதில் :* தமிழ் மக்கள் மீதான இலங்கை அரச படைகளின் ஆக்கிரமிப்புக்கள், அடாவடித்தனங்களை நிறுத்தும் போதுதான் அமைதி நிலை தோன்றும்.

தமிழர் தாயகத்தில் தோன்றும் அமைதி நிலைதான் இலங்கைத் தீவில் ஒட்டுமொத்தமான அமைதி நிலையை உருவாக்கும். இந்த யதார்த்தத்தை இந்தியா உட்பட உலக நாடுகள் அனைத்தும் புரிந்துகொள்ள வேண்டும். இராணுவ ரீதியாக இலங்கை அரசாங்கத்தைப் பலப்படுத்துவது என்பது, தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து நிற்கும் படைகளுக்கும் துணைபோவதாகவே தமிழ் மக்கள் எண்ணத் தலைப்படுவார்கள்.



இந்தவிடயத்தில் - தமிழ் மக்கள் தமது நிலைப்பாடுகளைத் தெரிவித்து வருகிறார்கள். அனைத்து நாடுகளும் தமிழ்மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகளை - உரிமைப்பிரச்சினைகளைத் தெளிவாகப் புரிந்துகொண்டு, தமது நிலைப்பாட்டை எடுக்கவேண்டுமென்பதுதான் எமது நிலைப்பாடு.

*கேள்வி :* கிளிநொச்சிக்கு யசூசி அகாஷி வருவது தடுக்கப்பட்டது குறித்து?

*பதில் :* இதுவொரு பாரதூரமான விளைவை ஏற்படுத்தும் என்றுதான் நான் நினைக்கின்றேன். அதாவது, சர்வதேச பிரதிநிதிகள், இராஜதந்திரிகள் எங்களுடைய தாயகப் பிரதேசத்துக்கு வருகை தருவதைத் தடுப்பதென்பது உண்மையிலேயே எமக்கும், மக்களுக்கும் கடந்த காலங்களை நினைவுக்குக் கொண்டு வருகின்றது.

எமது தாயகப் பகுதிக்கு இராஜதந்திரிகளும், சர்வதேச பிரதிநிதிகளும் வருவதைத் தடுத்து, நிலைமைகளை நெருக்கடிக்குள்ளாக்கி, உலக நாடுகள் உண்மையை அறியவிடாமல், பெரியதொரு இன அழிப்புப் போரைக் கூட முன்னெடுக்கத் துணிகிறார்களோ என்ற சந்தேகம் ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது.

இந்தப் பின்னணியில்தான் சிந்திக்கின்றோம். சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்தின் சதிமுயற்சிகளுக்கு பலியாகிவிடக்கூடாது என்பது மக்களுடையதும், எங்களுடையதும் நிலைப்பாடாக உள்ளது.

20 வருடங்களுக்கு மேலாக ஒரு கொடிய போரைச் சந்தித்து - மனிதாபிமான நெருக்கடிகளைச் சந்தித்த மக்களாக எமது மக்கள் உள்ளார்கள். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக்கூட கடந்த ஒரு வருட காலமாக எவ்வித சர்வதேச உதவிகளும் கிடைக்கவில்லை. பெரும் அவலமான வாழ்வுக்குள் எமது மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

சமாதான முயற்சிகளில் முழு அளவில் நம்பிக்கையிழந்து, விரக்தியின் விளிம்பில் நிற்கின்ற மக்களுக்கு சர்வதேச பிரதிநிதிகள் கூட வருகை தந்து உண்மை நிலையைப் பார்ப்பதற்கு தடுத்துவருவதன் மூலமாக அரசாங்கத்தின் பாரிய சதிமுயற்சியை எம்மால் உணரமுடிகின்றது. அமைதி முயற்சிகளில் சர்வதேச சமூகம் காட்டிவரும் அக்கறை காரணமாகத்தான் தமிழினம் ஓரளவுக்கேனும் நம்பிக்கை கொண்டிருக்கின்றது.

இதனைக்கூட அரசாங்கம் தடுத்து நல்லெண்ண முயற்சிகளை உதாசீனப்படுத்துவது என்பது மீண்டும் தமிழ் மக்கள் மீது இன அழிப்புப் போரை முன்னெடுக்கின்ற சதிமுயற்சியாக இருக்கலாம் என்று சந்தேகிக்க வைக்கின்றது.

கேள்வி: அம்பாறையில் படையினரின் உலங்குவானூர்தி தாக்கப்பட்டது தொடர்பாக....?

பதில்: இதுவொரு அபாண்டமான குற்றச்சாட்டு. இது தொடர்பாக நோர்வே தூதரகத்துக்கும், கண்காணிப்புக்குழுவுக்கும் தெரிவித்துள்ளோம்.

அண்மைக் காலத்தில் சர்வதேச சமூகத்தினருடனான தமிழர் தரப்பின் உறவுநிலையைச் சீர்குலைப்பதற்கு அரசாங்கம் பெரும் எடுப்பிலான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

அதனுடைய கபடநோக்கமும், மிகவும் விசமத்தனமுமான ஒரு நடவடிக்கைதான் இந்த உலங்குவானூர்தியின் மீதான தாக்குதல்.

உலங்குவானூர்திகள் எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்கு முன் அனுமதியுடன் பலமுறை வந்து சென்றுள்ளன. ஆனால், தாக்கப்பட்ட உலங்குவானூர்தியில் இத்தாலிய வெளிவிவகார அமைச்சர் பயணித்ததாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக எமக்கு எதுவித தகவல்களும் இல்லை. உலங்குவானூர்தியானது எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் பயணித்ததாகவும், அது தாக்கப்பட்டதாகவும் ஒரு செய்தியை அரச தரப்பு கசியவிட்டுள்ளது. இதன் உண்மைத்தன்மை என்ன என்பதை அறியமுடியாமல் இருக்கிறது.

எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் இப்படியானதொரு சம்பவம் நடைபெறவில்லையென, எமது தளபதிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். இது அரசாங்கத்தின் திட்டமிட்ட நடவடிக்கையாகும்.

ஐரோப்பிய நாடுகளுடனான தமிழ்த் தரப்பின் உறவுகளைத் துண்டிப்பதற்கான அரசாங்கத்தின் திட்டமிட்ட நாடகம் என சு.ப.தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்தார்.

## மருத்துவபீட மாணவர் ஒன்றிய 25 ஆம் ஆண்டு நிறைவு விழா!



யாழ்ப்பாணம்

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர் ஒன்றியத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், நாடி இதழ் வெளியீட்டு வைபவமும் நேற்று யாழ். பல்கலைக்கழக கைலா சபதி கலையரங்கில் - மருத்துவ பீட மாணவர் ஒன்றியத்தலைவர் த. காண்டீபன் தலைமையில் சிறப்புற நடைபெற்றது.

இந்தநிகழ்வில் - பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் எம்.சிவசூரிய கலந்துகொண்டார். 25 ஆவது ஆண்டு மலரை வைத்தியக் கலாநிதி கௌரி செல்வரட்ணம் வெளியீட்டுவைக்க வேந்தர் பேராசிரியர் சிவசூரிய பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து - நாடி இதழை, யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட முத லாம் அணியின் சார்பில், யாழ். போதனா வைத்தியசாலை சத்திர சிகிச்சை நிபுணர் எஸ்.ஜெயரட் ணம் வெளியிட்டுவைக்க வேந்தர் பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து - பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர் உரைகளையடுத்து, நீண்டகாலமாக மருத்துவ பீடத்தில் பணியாற்றிய வைத்தியர்கள், பேராசிரியர்களுக்குச் சான்றிதழ்களும், நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன.

## சமூக பொருளாதார அபிவிருத்திக்குழு பயிற்சிப்பட்டறை!

கிளிநொச்சி

2005 ஆம் ஆண்டில் வவுனியா வடக்கில் மேற்கொள்ளப்படும் ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சமூகமட்ட அமைப்புக்களை வலுப்படுத்தும் நோக்கில் திட்டமிடப்பட்ட பயிற்சிப் பட்டறைகள் கடந்த 14 ஆம் திகதி காலை 11 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை நெடுங்கேணி பொதுநோக்கு மண்டபத்தில் இடம் பெற்றது.


**காணி விற்பனைக்கு**

கிளிநொச்சி நகரத்திலிருந்து 1 1/2 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள திருவையாறு 1 ஆம் பகுதி 32 ஆம் இலக்க நல்ல குடியிருப்பு சூழலில் உள்ள 1/2 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. பிரித்தும் கொடுக்கப்படும்.

தொடர்பு T.P: 3164615 (2142)

**ராஜா** யாழ்ப்பாணம்

இன்று முதல்

பிரசன்னா, மீராஜஸ்மின் மற்றும் பலர் நடித்த

**கஸ்தூரிமான்**

காட்சிகள்:-10.30,2.30, 6.30 , 9.30 (பு.நேரம்)

**மனோகரா** யாழ்ப்பாணம்

இந்தியா இலங்கை ஒரே தின வெளியீடாக

சூரியா, திரிஷா, வடிவேல், நடித்த

DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்



**ஆறு**

காட்சிகள்

10.30, 1.30, 4.30, 7.30, 10.30

**நாகலிங்கம்** யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

ஷாம், சினேகா, அபர்ணா, வடிவேல் மற்றும் பலர் நடித்த

**ABCD**

காட்சிகள்;-10.30, 2.00 (புதிய நேரம்)

Super Star Hero

TOM CRUISE in

WAR OF THE WORLD

காட்சிகள்;-5.15, 8.15, (புதிய நேரம்)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

சரத்குமார்,தேவயானி நடித்த

**மூவேந்தர்**

காட்சிகள் 11.00, 2.45, 5.00 (புதிய நேரம்)

**சுன்னாகம் நாகம்ஸ்**

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினவெளியீடு

அக்ஷன் கிங்அர்ஜுன், நமீதா மற்றும் பலர் நடித்த




தற்காலிக புதியநேர மாற்றம்

காட்சிகள்:- காலை 11.00 ,3.00, 7.00 (பு.நே)

# புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டாலே வடக்கு - கிழக்கிற்கு அதிகாரப்பகிர்வு!

## சோபித தேரரும் நிபந்தனை விதிக்கிறார்



கொழும்பு

தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதப்போராட்டத்தைகைவிட்டு நாட்டின் இறைமை ஐக்கியத்தை ஏற்றுக்கொண்டால் மட்டுமே, இந்தியாவில் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் போன்ற அதிகாரப் பரவலாக்கல் குறித்து பேச்சு வார்த்தை நடத்த தாம் தயாராக இருப்பதாக ஜாதிக ஹெல உறு மயவின் பொதுச் செயலாளர் ஓமல்பே சோபித தேரர் தெரி வித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

எமது இந்த நிலைப்பாட்டை மகிந்தவுக்கும் அறிவித்துள்ளோம். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில்நாட்டின்இறைமை ஐக்கியம் பாதுகாக்கப்பட்டுள்ள அதேவேளை- மாநிங்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. அந்த முறையில் நாம் கவரப்பட்டுள்ளோம். இந்திய முறையை எமது நாட்டுக்கும் தேவையான வகையில் அமுல்படுத்தலாம். இது குறித்து ஆராய பேச்சு வார்த்தை நடத்தத் தயாராக இருக்கிறோம்.

புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த நாம் 12 முன் நிபந்தனைகளை விதித்துள்ளோம். அதேவேளை ஹெல உறுமயவினால் மட்டும் தெரிவு செய்யப்பட்டவர் அல்ல மகிந்த ராஜபக்ஷ. சகல அரசியல் கட்சிகளுடனும் கலந்தாலோசனை நடத்திய பின்னரே ஒரு பொது முடிவுக்கு வரமுடியும் என்பதையும் நாம் அறிவோம்.

நாட்டின்இனப்பிரச்சினைக்கு அதிகார பரவலாக்கல் மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

ஆயுதம் தாங்கிய புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தாமல், வடக்கு - கிழக்கு மாகாணத்தின் ஜனநாயக கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். அதேவேளை, வடக்கு-கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும்.

இந்திய மாதிரி என்பது தற்பொழுது மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை விட கூடுதலானதாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## விசின்னத்தம்பி ஞாபகார்த்த நூல் வெளியீடு

சமூகப்பற்றாளர் வி.சி. சின்னத்தம்பியின் சிவபதம் குறித்த அஞ்சலி நிகழ்வு மானிப்பாய் கிழக்கிலுள்ள அன்னாரது இல்லத்தில் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத் தலைவர் மயில்வாகனம் தலைமையில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் பண்டிதர் சி.அப்புத்துரையால் அமரரின் நினைவாகத் தொகுக்கப்பட்ட "அருள்நிதி" எனும் சைவநூலை இந்துநாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி கலைவாணி இராமநாதன் வெளியிட்டு நயப்புரை வழங்கவுள்ளார்.




ஹொங்கொங்கில் நடைபெற்றுவரும் உலக வர்த்தக மகாநாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து - கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் ஒரு காட்சி.

படம்: தமிழ்நெற்.

## ஐ.தே.க எம்பிக்கள் ஐந்துபேர் அரசாங்கத்துடன் இணைவராம்!

### ஆளும்கட்சி வட்டாரங்கள் தகவல்

கொழும்பு

தற்போது நடை பெறும் வரவு-செலவுத்திட்ட விவாதத்தின்போது, அடுத்த சில தினங்களுக்குள் ஐக்கியதேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐவர் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளவிருப்பதாக ஆளும்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

அடுத்த 12 வருடங்களுக்கு ராஜபக்ஷவே ஜனாதிபதியாக இருப்பார் எனக் கருதும் இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்க கட்சித் தலைமையை - கருஜெயசூரியவிடம் ஒப்படைக்கவேண்டும் எனக் கருதுவதாகவும் இந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளவிருக்கும் இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவருக்கு தேச மீள் கட்டமைப்பு அமைச்சு பதவி வழங்கப்பட விருப்பதாகவும் ஆளும் கட்சி வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## எதிர்க்கட்சிக்கு அதிக வாய்ப்பு!

கொழும்பு

நாடாளுமன்ற ஆலோசனைக் குழுவில் கூடுதலான எதிர்க்கட்சி உறுப்பினர்களை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. கடந்த புதன்கிழமை நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது. இந்தத் தீர்மானம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

நாடாளுமன்ற ஆலோசனைக் குழுவில் மூன்றில் இரண்டு பங்கினர் எதிர்க்கட்சி உறுப்பினர்களாக இருக்கவேண்டுமெனவும், இதற்கமைய ஜே.வி.பியின் 31 நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சி தரப்பிலும், 28 ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத் தரப்பிலும் சபையில் அமர்வதற்கும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் தற்பொழுது அமுல்படுத்தப்பட்டிருக்கும் அவசரகாலச் சட்டத்தை மேலும் நீடிப்பது தொடர்பான விவாதத்தை எதிர்வரும் 21ஆம் திகதி நடத்துவதற்கும்-

கடந்த புதன்கிழமை நடைபெற்ற கட்சித்தலைவர்கள் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## புலிகளுக்கு அவப்பெயர் ஏற்படுத்தவே அறுகம்பையில் ஹெலி மீது தாக்குதல்

### ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளிடம் கூட்டமைப்பு தெரிவிப்பு

கொழும்பு

சர்வதேச அளவில் விடுதலைப் புலிகளுக்கு அவப்பெயர்ஏற்படுத்த அரசாங்கம் மேற் கொண்ட சதிதான் அறுகம்பைத் தாக்குதல் என்று - ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளிடம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விளக்கியுள்ளது.

கொழும்பில் கடந்த வியாழக் கிழமை ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அறுகம்பைத் தாக்குதல் சம்பவம் குறித்து விளக்கிக் கூறினார்.

ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் கூறியதாவது -

பொதுவாக எந்தவொரு தாக்குதல் நடந்தாலும் புலிகள் மீது தான் பழி போடப்படுகின்றது. உண்மையில் ஹெலிகொப்டர் மீதான துப்பாக்கிச் சூட்டுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பில்லை.

சுனாமி வடக்கு-கிழக்கு பகுதிகளைத் தாக்கியதும் முதன் முதலில் கொழும்பிலுள்ள இத்தாலிய தூதுவர் கிளிநொச்சிக்குச் சென்று புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்து ஆறுதல் கூறியதுடன், நிவாரணப் பொருட்களையும் கையளித்தார்.

தமிழ் மக்களின் போராட்டங்கள் பற்றியும், அரசாங்கத்தின் புறக்கணிப்புகள் பற்றியும் இத்தாலிக்கு நன்கு தெரியும். இப்படியான நிலையில் இத்தாலியின் பிரதி வெளிவிவகார அமைச்சர் பயணம் செய்த ஹெலிகொப்டர் மீது துப்பாக்கியால் சுடவேண்டிய அவசியம் புலிகளுக்கு இல்லை.

சர்வதேச நாடுகள் மத்தியில் விடுதலைப் புலிகளுக்கு அவப் பெயர் ஏற்படுத்தும் நோக்கிலேயே இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

தென்பகுதியில் உள்ள சிங்களக் கடும் போக்காளர்களும், அரசாங்கத்துடன் இணைந்துள்ள சிங்களத் தீவிரவாதக் கட்சிகளும் புலிகளை சர்வதேச நாடுகள் குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்யவேண்டுமென்று கோரி வருகின்றனர். அதற்கு வலுச்சேர்க்கும் வகையிலேயே இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடத்தப்பட்டுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தெரிவித்தனர்.

இதனிடையே அறுகம்பை யில் ஹெலிகொப்டர் மீதான தாக்குதல் குறித்து விசாரணை நடத்த வேண்டுமென்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவு க்கு விமானப் படைத் தளபதி எயார் வைஸ் மார்ஷல் டொனால்ட் பெரேரா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்த கடிதத்தை கண்காணிப்புக் குழுவின் தலைவ ருக்குநேற்றுமுன்தினம் டொனால்ட் பெரேரா அனுப்பி வைத்தார். இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து விசாரணை நடத்துமாறு பொலிஸ்மா அதிபரிடமும் விமானப் படைத் தளபதி கோரியுள்ளார்.

## இந்த வருடத்தில் 419 பேர் பலி!

கொழும்பு

இந்த வருடத்தில் இடம் பெற்ற தாக்குதல்களில் 419 பேர் கொல்லப்பட்டிருப்பதாகவும், 504 பேர் காயமடைந்திருப்பதாகவும் பாதுகாப்புத் தலைமையக விசேட ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில் பாதுகாப்பு படைகளுக்கு எதிராக மொத்தம் 272 தாக்குதல்கள் நடைபெற்றிருப்பதாகவும், இதில் இராணுவத்தினருக்கெதிராக 164 தாக்குதல்களும், பொலிஸாருக்கு எதிராக 96 தாக்குதல் சம்பவங்களும் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலே ஆகக் கூடுதலாக 144 சம்பவங்களில் உயிரிழப்புக்களும், காயங்களும் ஏற்பட்டன.

இந்தக் காலப்பகுதியில் 48 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், 96 பேர் காயமடைந்துள்ளனர். நவம்பர் 18ஆம் திகதிக்கும் - டிசம்பர் 12ஆம் திகதிக்கும் இடையிலே அதிகளவான தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றன.

இந்தக் காலப்பகுதியில் 63 பேர் கொல்லப்பட்டதுடன், 121 பேர் காயமடைந்தனர். 16 முஸ்லிம்கள் கொல்லப்பட்டதுடன், 31 பேர் காயமுற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# விலை பேசப்படும் சமூகமாக மலையகம் மாறக்கூடாது



### மலையக மக்கள் முன்னணித்தலைவர் எச்சரிக்கை

கொழும்பு

விலை போகும் தரகர்களால் விலை பேசப்படும் சமூகமாக மலையகம் ஆகிவிடக்கூடாது என்று- மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் எச்சரித்துள்ளார்.

மலையகத்தின் அண்மைய அரசியல் மாற்றங்கள் தொடர்பில் சந்திரசேகரன் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

மலையகத்தில் சில தரகு தொழிற்சங்கவாதிகளின் செயற்பாடுகள் இனவாதிகளுக்குத் துணை போவதாகவே அமைந்துள்ளது. ஆகவே தான் மலையக இனத்தைக் காக்கும் நோக்குடன் மலையக மக்கள் முன்னணி மலையகத்தில் சக்தியான அமைப்புக்களுடன் உறவை ஏற்படுத்துகின்றது.

தரகு தொழிற்சங்கவாதிகளின் நடவடிக்கைகளால் மலையகத்தில் மலையக மக்கள், மலையக சமூகத்தின் எதிர்காலத்திற்கு உத்தரவாதமற்ற நிலையே தோன்றும்.


மலையக மக்கள் முன்னணியும், இலங்கை தொழிலாளர் காங்கிரசும் இன்று பலமிக்க அமைப்புகளாக இருக்கின்றன. மலையக தமிழர்களின் இருப்பு இந்த இரு ஸ்தாபனங்களின் செயற்பாடுகளினால் தான் தீர்மானிக்கப்படுகின்றன. இந்த இரு அமைப்புக்களை விடவும் மலையகத்தை நேசிக்கின்ற நேர்மையான சக்திகளும் இங்கு இல்லாமல் இல்லை. இந்த நிலையில் மலையக மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சி அல்லது அரசியல் தெளிவு ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக இனவாத சக்திகளும், அவர்களுக்கு தேவையான பதவி, பணத்தை வழங்கி எம்மை கூறுபோடும் சதியைலாவகமாக செய்து வருகின்றனர்.

நமது சமுதாயம் பல கூறுகளாக பிளவுபட்டு, பலவீனமடைந்ததும்- வன்முறைகளுக்கும், இனவாதத்துக்கும் இந்த சக்திகள் தூபமிடலாம். எமது 15 லட்சம் மலையக சமூகத்தவர்களுக்கும் ஒரு உத்தரவாதமில்லாத நிலை தோன்றலாம்.

ஆகவேதான் மலையக மக்கள் முன்னணி எமது சகோதர அமைப்பான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பலவீனப்படக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கின்றது. இ.தொ.கா. பலவீனப்படுத்தப்படுவது என்பது மறுபக்கத்தில் மலையக சமூகம் பலவீனப்படுத்தப்படுகின்றது என்றே அர்த்தப்படும். மலையக மக்கள் முன்னணி பலவீனப்படுத்தப்படுகின்றது என்றால் மறுபுறம் நல்ல சிந்தனைகள் பலவீனப்படுத்தப்படுகின்றது என்பதே அர்த்தமாகும்.

ஆகவே, விலை போகும் தரகர்களினால் விலை பேசப்படும் சமூகமாகநாம்ஆகிவிடக்கூடாது. விழிப்புணர்ச்சி கொண்ட சமுதாயத்தை அமைக்க வேண்டிய கடமையில் இருந்து இளைஞர்களே பின்வாங்கி விடாதீர்கள். மலையகத்தை காக்கவேண்டிய, எமது மக்களைக் காக்க வேண்டிய, மலையகத்தின் சக்திமிக்க அமைப்புகளை காக்க வேண்டிய பொறுப்பை உணர்ந்து செயற்படுங்கள் என்றும் கூறினார்.

# அவுஸ்ரேலியாவுடனான முதல் டெஸ்ட்; தென்னாபிரிக்க அணி 296 ஓட்டங்கள்



பேர்த் —


அவுஸ்ரேலிய அணிக்கு எதிராக பேர்த்தில் இடம்பெற்றுவரும் முதலாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 296 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் தனது முதலாவது இனிங்ஸை தொடர்ந்த தென்னாபிரிக்க அணி விக்கெட் இழப்பின்றி 38 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் டி-வில்லியர்ஸ் 14, சிமித் 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்த இணைப்பாட்டம் நேற்றும் தொடர்ந்தது.

இவர்கள் இருவரும் சிறப்பாக ஆடி அணிக்கு சிறந்த அடித்தளத்தை இட்டனர். அணி 83 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 34 ஓட்டங்களைப் பெற்றிருந்த சிமித் வீழ்த்தப்பட்டார். இதனையடுத்து கிப்ஸ் இணைந்தார். இந்த ஜோடியும் சிறப்பாக விளையாடிக் கொண்டிருக்கையில் அணி 127 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 27 ஓட்டங்களைப் பெற்றிருந்த கிப்ஸ் - லீயினால் வெளியேற்றப்பட்டார்.

இதன்பின் ரூடொல்ப் இணைந்தார். இந்த நிலையில் தனது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்து சிறப்பாக விளையாடிக் கொண்டிருந்த டி-வில்லியர்ஸ் 109 பந்துகளில் 10 பவுண்டரிகள் அடங்கலாக 68 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் வோனின் பந்தில் போல்டானார்.

அடுத்து பிறின்ஸ் இணைந்தார். இதில் ரூடொல்ப் பந்துகளை வீணடித்து ஓட்டங்களைப் பெறாத நிலையில், லீயின் பந்தில் லாங்கரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இவர் 28 பந்துகளை எதிர்கொண்டு 1 பவுண்டரி அடங்கலாக 8 ஓட்டங்களையே பெற்றிருந்தார். இதன்பின் கெம்ப் இணைந்தார். ஆனால், அவரும் ரூடொல்ப்பின் வழியையே பின்பற்றினார். இவர் 29 பந்துகளில் 1 பவுண்டரி அடங்கலாக 7 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில்- மக்ராவின் பந்தில் ஹொட்ஜிடம் பிடிகொ



டுத்து ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து பௌச்சர் இணைந்தார். இந்த ஜோடி சிறப்பாக விளையாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தவேளை, பிறின்ஸ் 28 ஓட்டங்களுடன், வோனின் பந்தில் எல்.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். இதையடுத்து பொலக் களமிறங்கினார். இவரின் ஆட்டத்தில் அனல் பறந்தது. இவர் அவுஸ்ரேலிய பந்து வீச்சாளர்களின் பந்துகளை எல்லைக் கோட்டிற்கு அனுப்பிக் கொண்டிருந்தார். இந்த ஜோடி நிலைத்து நின்று ஆடியதால், அணியின் ஓட்ட எண்ணிக்கை சடுதியாக அதிகரித்தது.

எனினும், அணி 224 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் - 35 பந்துகளில் 6 பவுண்டரிகள் அடங்கலாக 34 ஓட்டங்களைப் பெற்றிருந்த பொலக், லீயின் பந்தில் போல்டானார்.

இதையடுத்து நெல் இணைந்தார். ஆனால், 77 பந்துகளில் 7 பவுண்டரிகள் அடங்கலாக 62 ஓட்டங்களைப் பெற்றிருந்த பௌச்சர், வோனின் பந்தில் ஹைடனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இதன் பின் வந்த லாங்வெல்ட் 0, என்ரினி 12 ஓட்டங்களைப் பெற்றநிலையில் 81.2 ஓவர்களில் தென்னாபிரிக்க அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 296 ஓட்டங்களை தனது முதல் இனிங்ஸில் பெற்றது. இதில் நெல் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் லீ 5, வோன் 3, மக்ரா மற்றும் பிறாக்கன் இருவரும்



தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இதனையடுத்து தனது 2ஆவது இனிங்ஸை தொடங்கிய அவுஸ்ரேலிய அணி நேற்றைய ஆட்டநேரமுடிவில் 1 விக்கெட் இழப்புக்கு 38 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் ஹைடன் 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். லாங்கர் 15, பிரெட் லீ 0 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது உள்ளனர். லாங்வெற் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றியுள்ளார்.

## வோன் இன்னொரு சாதனை



பேர்த் —

ஒரே வருடத்தில் டெஸ்ட் போட்டியில் அதிகூடிய விக்கெட்டுக்களை வீழ்த்தியவர் என்ற உலக சாதனையை அவுஸ்ரேலிய வீரர் ஷேன் வோன் படைத்தார்.

பேர்த்தில் நடைபெறும் தென்னாபிரிக்க அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் - நேற்று டி வில்லியர்ஸ் மற்றும் பிறின்ஸ் ஆகியோரின் விக்கெட்டுக்களை வீழ்த்தியதை அடுத்தே இந்த சாதனையை அவர் படைத்தார்.

1981ஆம் ஆண்டில் டெனிஸ் லில்லி 85 விக்கெட்டுக்களை கைப்பற்றி படைத்த சாதனையை வோன் 86 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதன் மூலம் முறியடித்தார்.

## இந்திய - இலங்கை அணிகளிடையே இன்று மூன்றாவது டெஸ்ட் ஆரம்பம்



அகமதாபாத் —

இந்திய - இலங்கை அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி இன்று அகமதாபாத் மோர்டல் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான சென்னையில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டி மழை காரணமாக சமனிலையில் முடிவுற்றது. புதுடெல்கியில் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் இந்திய அணி வெற்றிபெற்றது.

இந்த நிலையில் மூன்றாவது போட்டி இன்று அகமதாபாத் நகரில் ஆரம்பமாகவுள்ளது. இரு அணி வீரர்களும் நேற்று மைதானத்தில் தீவிர பயிற்சியில் ஈடுபட்டனர். அசம்பாவிதங்கள் ஏதும் நடைபெறாமல் இருக்க வீரர்களுக்கும், ஹொட்டேல்களுக்கும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மேலும் போட்டி நடைபெறும் மைதானம் பலகோடி ரூபாவுக்கு காப்புறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்திய அணியைப் பொறுத்தவரையில் 2ஆவது டெஸ்டில் வெற்றி பெற்றுவிட்டதால், இந்த டெஸ்ட்டை சமன் செய்தாலேபோதும், தொடரை வென்றுவிடலாம்.

டெல்கி டெஸ்டில் காய்ச்சல் காரணமாக ஷேவாக் ஆடுவில்லை. அவர் குணமடைந்து விட்டதால், இன்றைய டெஸ்டில் களமிறங்குகிறார். முதல் இரண்டு டெஸ்டில் சேர்க்கப்பட்ட கங்கூலி 3ஆவது டெஸ்டில் நீக்கப்பட்டார். இதனால் சமீபகாலமாக மோசமாக ஆட்டங்களை வெளிப்படுத்திவரும் லக்ஷ்மன், ஷேவாக் ஆகிய இருவரும் சிறப்பாக ஆடவேண்டிய நிலையில் உள்ளனர்.

டெல்கி டெஸ்டில் யுவராஜ் நன்றாக ஆடினார். இதனால் இன்று தொடங்கும் 3ஆவது டெஸ்டில் அவர் நிச்சயம் களமிறங்குவார். இரண்டு டெஸ்டிலும் சோபிக்காத காம்பீர் நிச்சயம் நீக்கப்படுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

அவருக்குப் பதிலாக மும்பை வீரர் வாசிம் ஜபாருக்கு வாய்ப்பு அளிக்கப்படும். வாசிம் ஜபார் 2000ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்டில் புதுமுகமாக களமிறங்கினார். இதுவரை அவர் 7 டெஸ்டில் விளையாடி 261 ஓட்டங்களை மட்டுமே எடுத்துள்ளார்.

இதில் அதிகபட்ச ஸ்கோர் 86ஆகும். கடைசியாக அவர் 2002ஆம் ஆண்டு நட்டிங்காமில் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்டில் விளையாடினார். சுமார் 3 ஆண்டு இடைவேளைக்கு பின்பு அவர் மீண்டும் விளையாட வந்துள்ளார்.

துடுப்பாட்டத்தில் மற்றபடி எந்த மாற்றமும் இருக்காது. சுழற்பந்து வீச்சில் கும்ளே, ஹர்பஜன் சிங் நல்ல நிலையில் உள்ளனர். வேகப்பந்து வீச்சில் பதான் அற்புதமாகச் செயற்படுவதோடு மட்டுமல்லாமல் துடுப்பாட்டத்தில் விளாசி வருகிறார். வேகப்பந்துவீச்சில் அகர்கர் நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக ஆர்.பி.சிங் புதுமுக வீரராகக் களமிறக்கப்படலாம்.

ஒருநாள் போட்டித் தொடரை இழந்துள்ள இலங்கை அணி 2ஆவது டெஸ்டிலும் தோல்வி அடைந்துள்ளது. இதனால் கடைசி டெஸ்டில் அந்த அணி சிறப்பாக விளையாட முயற்சிக்கும். எப்படியும் வெற்றி



பெற்று தொடரை சமன் செய்ய இலங்கை அணி கடுமையாகப் போராடும்.

இலங்கை அணியில் வாஸ், முரளிதரன் ஆகியோர் பந்துவீச்சில் கலக்கினாலும், துடுப்பாட்ட வரிசை மோசமாக உள்ளது. கப்டன் அத்தபத்துவும், ஜெயவர்த்தனவும் மட்டும்தான் அணிக்காக போராடி ஓட்டங்களைச் சேர்க்கின்றனர். இதனை சரிசெய்ய அந்த அணியில் சில மாற்றங்கள் செய்யப்படும்.

இந்திய - இலங்கை அணிகளிடையேயான கடைசி டெஸ்ட் இன்று காலை 10 மணிக்கு தொடங்கும்.

இந்திய அணி -

ராவிட் (கப்டன்), டெண்டுல்கர், ஷேவாக், காம்பீர், வாசிம் ஜபார், யுவராஜ் சிங், மொகமட் கைவ், லக்ஷ்மன், டோனி, பதான், கும்ளே, ஹர்பஜன் சிங், அகர்கர், ஆர்.பி.சிங், முரளி கார்த்திக்.

இலங்கை அணி -

அத்தபத்து (கப்டன்), ஜெயவர்த்தன, டில்ஷான், சங்ககார, சமரவீர, முரளிதரன், குணவர்த்தன, தரங்க, சஜீவ, வாஸ், பெர்னாண்டோ, மலிங்க, முபாரக், மஃரூப்.

## விளையாட்டு

# கிரிக்கெட்டிலிருந்து விலகமாட்டேன்!

## சபதம் செய்கிறார் கங்கூலி

கொல்கத்தா —


இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர் கங்கூலி புதுடெல்கி டெஸ்டில் சிறப்பாக விளையாடிய போதிலும், இலங்கைக்கு எதிராக அகமதாபாத்தில் இன்று நடைபெறவுள்ள 3ஆவது டெஸ்ட் போட்டிக்கான அணியிலிருந்து நீக்கப்பட்டார்.

இது இந்தியா முழுவதும் உள்ள ரசிகர்கள் மற்றும் முன்னாள் கிரிக்கெட் வீரர்களிடையே பெரும் சர்ச்சையை உருவாக்கியுள்ளது. கங்கூலியின் சொந்த இடமான கொல்கத்தாவில் அவருடைய ரசிகர்கள் தொடர்ந்து பஸ் - ரயில் மறியலில் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது இந்தப் பிரச்சினை இந்திய நாடாளுமன்றம் வரை சென்றுவிட்டது. கங்கூலி அணியில் மீண்டும் இடம்பெறுவாரா? அல்லது பிரச்சினைகளுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கும் நிலையில் கங்கூலி அதிரடியாக அணியில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவிப்பாரா? என்ற குழப்பமான சூழ்நிலை நிலவி வருகிறது.

இந்த நிலையில் அணியில் இருந்து நீக்கப்பட்டு மூன்று நாட்களாகியும் எந்தவித கருத்துக்களையும் கூறாத கங்கூலி முதன் முறையாக நேற்று முன்தினம் கருத்துத் தெரிவித்தார்.

அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது -



அடுத்து பாகிஸ்தான், இங்கிலாந்துக்கு எதிரான போட்டிகள் நடைபெறவுள்ளன. கிரிக்கெட்டிலிருந்து நான் விலகமாட்டேன். மேலும் விரைவில் மீண்டும் அணியில் இடம் பிடிப்பேனென அவர் கூறினார்.

இந்த நிலையில் மேற்கு வங்காளத்தில் உள்ள தனியார் தொலைக் காட்சியான ஸ்டார் அனந்தா எஸ்.எம்.எஸ் மூலம் நடத்திய கருத்துக் கணிப்பில் 98 சதவீதமானோர் கங்கூலி நீக்கப்பட்டதற்கு அரசியல்தான் காரணமெனக் கூறியுள்ளனர்.

## ராவிட் வைத்தியசாலையில்

அகமதாபாத் —

இந்திய கிரிக்கெட் சபை கப்டன் ராவிட்டுக்கு சுகவீனம் ஏற்பட்டதையடுத்து, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அகமதாபாத்தில் இந்திய - இலங்கை அணிகளுக்கிடையே இன்று 3ஆவது கிரிக்கெட் டெஸ்ட் நடைபெறவுள்ள நிலையில் நேற்று காலை இந்திய அணியின் கப்டன் ராவிட் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ராவிட்டின் உடல்நிலையைப் பொறுத்து அவர் போட்டியில் பங்கு பெறுவது குறித்து முடிவெடுக்கப்படும் என்றும், அவரால் போட்டியில் பங்கு பெறஇயலாத நிலையில் ஷேவாக் கப்டனாக அணியை வழிநடத்துவார் என்றும் இந்திய அணியின் பயிற்சியாளர் கிரேக் சப்பல் தெரிவித்தார்.



# இரண்டாயிரத்து 173 வெடிபொருட்கள்

# பருத்தித்துறைப் பகுதியில் மீட்டெடுப்பு!

பருத்தித்துறை—

பருத்தித்துறைப் பகுதியில் டெனிஸ் மிதிவெடி அகற்றும் பிரிவினரால் ஒரு லட்சத்து 92 ஆயிரத்து 364 சதுரமீற்றர் நிலப் பரப்பில் மிதிவெடிகள் அகற்றப் பட்டு, 2 ஆயிரத்து 173 வெடி பொருட்கள்மீட்கப்பட்டுள்ளதாக டெனிஸ் மிதிவெடி அகற்றும் பிரிவின் தொழில் நுட்ப ஆலோசகர் கவெல்யக்கா தெரிவித் தார்.

நேற்று முன்தினம் அவர் அலுவலகத்தில் பத்திரிகையா ளர்களைச் சந்தித்தபோதே இவ் வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத் துத் தெரிவிக்கையில் - எமது நிறு வனம் யாழ். மாவட்டத்தில் இது வரை 7000 மிதிவெடிகளை அகற் றியுள்ளது. தற்போது ஊர்காவற் துறை, அளவெட்டி, பருத்தித் துறை ஆகிய பகுதிகளில் கண்ணி வெடிகளை அகற்றி வருகின்றோம்.

இதைவிட 2000 ஆம் ஆண் டில் இருந்து அவசரமாக, உடனடியாக மிதிவெடிகளை அகற்றக் கோரும் சில பகுதிகளை நவீன தொழில் நுட்பத்தின் உதவி யுடன் அகற்றும் குழு ஒன்றை அமைக்க இருக்கின்றோம்.

எனது பணி யாழ். மாவட் டத்தைத்தவிர கிளிநொச்சி, திரு கோணமலை ஆகிய பகுதிகளி லும் நடைபெற்று வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

# குருபூசைத் தினங்களை கொண்டாடுவது வெறும் சம்பிரதாயமாக இருக்கக் கூடாது

## சிவத்திரு. குமாரசுவாமி தெரிவிப்பு

உடுவில்—

சைவ மக்களாகிய நாம் சமய குரவர்கள் மற்றும் இந்து சமயத்தின் காவலர்களாக விளங்கிய வர்களுக்கு அவர்களின் சமயப் பணியை நினைவு கூர்ந்து குரு பூசை தினம் கொண்டாடுகி றோம்.

இக் குருபூசையானது வெறும் சம்பிரதாய பூர்வமாகக் கொண் டாடக் கூடாது. அவர்கள் எந்த இலட்சியத்திற்காக வாழ்ந்து முத்தியடைந்தார்களோ அந்த வழியை நாமும் பின்பற்றி அவர்களின் சமயப் பணியை தொடர்வதே அவர்க ளுக்கு நாம் செய்யும் மிகச் சிறந்த நன்றிக்கடனாகும்.

இவ்வாறு உடுவில் இந்து இளைஞர் மன்றத்தினரால் ஏற் பாடு செய்யப்பட்ட நாவலர் விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட சமயச் சொற் பொழிவாளர் சிவத்திரு வ.குமார சுவாமி தெரிவித்தார்.

இந்து இளைஞர் மன்றத் தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமை யில் உடுவில் மான்ஸ் கல்லூரி யில் நடைபெற்ற இந்த விழாவில் அவர் தொடர்ந்து பேசும் போது -

இராமன் ஆட்சிக் காலத் தில் இலங்கையில் 9 கோடி சிவ லிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப் பட்டதாக வரலாற்று நூல்கள் கூறுகின்றன. 1505இல் முதன் முதலாக இலங்கைக்கு வருகை தந்த போர்த்துக்கீசர், அதன்பின் ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகி யோரால் அவை இடித்தழிக்கப் பட்டன. அதுமட்டுமல்லாது பதவிகள், பட்டங்கள், பணத் தைக் கொடுத்து எமது இந்து சமய மக்களை தமது மதத்திற்கு மாற்றும் கைங்கரியங்களிலும் ஈடுபடத்தொடங்கினர். அந்த வேளையில் தோன்றியவர்தான் ஆறு முகநாவலர். இவர் செய்த மிகப்பெரிய சமயப் பணிகள் காரணமாக மேலும் மக்கள் மதம் மாறாது தடுக்கப்பட்ட னர்.

வெள்ளிக்கிழமைகள் தோறும் சமயப்பிரசங்கம், இல வசமாக நூல்கள் அச்சிட்டு மக்க ளுக்கு கொடுத்தமை போன்ற செயல்களோடு, சமூகப்பணியா கிய வறிய மக்களுக்கு கஞ்சித் தொட்டி தர்மத்தையும் மேற் கொண்டார். அவர் காலத்தில் செய்யப்பட்ட இலவச நூல் அச் சிட்டு வெளியிடும் பணி தற் பொழுதும் இங்கே கல்வெட்டு போன்ற நூல்களை அச்சிட்டு வெளியிடுதல் மூலம் நடை பெறுகின்றது.

ஆனால், அவற்றின் பெறுமதி, மகிமை என்பன இக்கால மக்க ளால் உணரப்படாது, அந்த நூல் கள் பல வழிகளாலும் துஷ்பிர யோகம் செய்யப்படுகின்றது. எனவே மக்கள்- நூல்கள், தேவார, திருவாசகங்களின் மதிப்பை உணர்ந்து சமய வாழ்வு வாழப் பழகிக்கொள்ள வேண்டும். எவரி டத்தில் அதிகளவு சமய வாழ்வு காணப்படுகிறதோ அவர் சிறந்த பண்பாளனாக சமூகத்தில் காணப்படுவார் எனக் கூறினார்.

நிகழ்ச்சி ஆரம்பத்தில் உடு வில் அம்மன் கோவில் பிரதம குரு சிவஸ்ரீ வா.முத்துச்சாமிக் குருக்கள் ஆசியுரை வழங்கினார். பாலர் பாடசாலை மாணவர்க ளுக்கு பரிசு வழங்கப்பட்டது டன் அவர்களின் கலை நிகழ்வு களும் இடம்பெற்றன. (101)

# பூச்சிகளின் தாக்கம் அதிகரிப்பு!

தென்மராட்சி—

தென்மராட்சியில் மட்டு வில் வடக்கு, சரசாலை வடக்கு, தெற்கு மற்றும் அதனை அண் டிய பகுதிகளிலுள்ள வயல்க ளில் கபிலநிறத் தண்டுத்தத்தி யின் தாக்கம் அதிகமாக அவதா னிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பூச்சியைக் கட்டுப் படுத்தாவிடில் விளைச்சலில் பாரிய இழப்புகள் ஏற்படும். இதனைக் கட்டுப்படுத்த இமிடா குளோரபிரிட் (அட்மயர்) பி.பி. எம்.சி., பிப்ரொனில் (றீஜன்ற்) எனறோபென்புறொக்ஸ் (றிபோன்) ஆகிய கிருமிநாசினி களைப் பயன்படுத்தலாம்.

இவை தொடர்பான மேல திக விபரங்களை சாவகச்சேரி விவசாய போதனாசிரியர் சு.விஜய குமாருடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளுமாறு கேட் கப்பட்டுள்ளது.

# பற்றுச்சீட்டுக்கள் அடங்கிய கைப்பை இனந்தெரியாதோரால் அபகரிப்பு!

கோண்டாவில்—

வடபிராந்திய போக்குவரத் துச்சபை ஊழியர் ஒருவரிடமி ருந்து 18 ஆயிரம் ரூபா பெறுமதி யுடைய பயணிகள் பற்றுச்சீட் டுப் புத்தகங்கள் அடங்கிய கைப் பையை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் அபகரித்துச் சென்றுள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர் பாக மேலும் தெரியவருவதா வது -

கோண்டாவில் டிப்போவிலி ருந்து அதிகாலை உரும்பிராய்ச் சந்தி நோக்கி சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோதே, மோட் டார் சைக்கிளில் பின்தொடர்ந்த இனந்தெரியாத நபர்களால் இவை அபகரித்துச் செல்லபட் டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் பயணிகள் பற்றுச்சீட் டுப் புத்தகங்கள் மற்றும் பொதுச் சீட்டுப் புத்தகங்கள் அடங்கிய 18 ஆயிரம் ரூபா பெறுமதியு டைய ஆவணங்களே இருந்ததாக வும் -

இதன் காரணமாக தனது பணி தற்போது போக்குவரத்து சபையால் நிறுத்திவைக்கப்பட் டுள்ளதாகவும் இலங்கை போக் குவரத்துச்சபையின் ஊழியரான உமாகாந்தன் பத்மகாந் என்பவ ரால் கோப்பாய் பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது. (82)




யாழ். வைத்தியசாலையிலுள்ள தொடர்பகக் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற கவிஞர் நாவண்ணனின் அக்கினிக் கரங்கள் நூல் அறிமுகவிழாவில் காட்சிப்படுத்தப்பட்ட நூல்களையும், நூலாசிரியர் நாவண்ணன் உரை நிகழ்த்துவதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களையும் காணலாம். படங்கள் யூட்

# சின்னஞ்சிறு செய்திகள்

## தலைமைத்துவப் பயிற்சி

காரைநகர்—

காரைநகர் ஊரி இளைஞர்- யுவதிகளுக்கான தலைமைத்து வப் பயிற்சி கருத்தமர்வு இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற வுள்ளது.

தோப்புக்காடு, பாலாவோடை, ஆகிய கிராம இளைஞர்-யுவ திகளும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர்.

முகுந்தன், ஜோசப்பாலா ஆகியோர் இந்தக் கருத்தமர்வை நடத்தவுள்ளனர். (91)

## வீதி புனரமைப்பு

யாழ்பாணம்—

கடந்த பல வருடங்களாகப் புனரமைக்கப்படாதிருந்த கொய் யாத் தோட்டம் புது வீதியி லுள்ள பொன்னம்பலம் குடியேற் றத்திட்டத்திற்கு ஊடாகச் செல் லும் வீதி புனரமைக்கப்பட்டுள்ளது.

இந்த வீதி புனரமைப்பின் மூலமான பயனை இந்தப் பகுதி மக்கள் முழுமையாக அடைந்து கொள்வதற்கு இந்த வீதியோடி ணைந்த கழிவு நீர் வாய்க்காலும் புனரமைக்கப்பட வேண்டியுள் ளது என்றும், அவ்வாறு புனர மைக்கப்படாதுவிடின், கழிவு நீர் வீதியின் நீளத்துக்கு தேங்கி நின்று புன்ரமைக்கப்பட்ட இந்த வீதியைச் சேதமாக்கிவிடும் என் றும் பொதுமக்கள் கவலை தெரி வித்தனர். (31)

## இயேசு பாலன் பிறப்பு விழா

யாழ்ப்பாணம்—

யாழ்.திருமறைக் கலாமன் றத்தின் வருடாந்த ஒளிவிழா நிகழ்வு இன்று காலை 6.45 க்கு யாழ். திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் ஜோன்சன் ராஜ் குமார் தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்த நிகழ்வில் அனைத்து திருமறைக்கலாமன்றத்தினரையும் கலந்து சிறப்பிக்குமாறு ஏற் பாட்டுக் குழுவினர் கேட்டுள்ள னர்.

தென்மராட்சி பிரதேச செய லக நலன்புரிச் சங்கத்தினர் நடத் தும் கிறிஸ்து பிறப்பு விழா-எதிர் வரும் 21ஆம் திகதி புதன் கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிற் பகல் 1 மணிக்கு இடம்பெறும்.

இந்த விழாவில் கிறிஸ்மஸ் பாடல்கள், நடனம், நாடகம், வேதா கம வாசிப்பு என்பன இடம் பெறும். பிரதேச செயலக நலன் புரிச் சங்கத் தலைவரும் பிரதேச செயலருமான செ.ஸ்ரீனிவாசன் தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெறும். (24)

கியூடெக்-கரித்தாஸ் நிறுவ னத்தின் இளவாலை இளையோர் குருக்களின் ஒளியின் சமாதான சங்கம நிகழ்வு- நாளை சில் லாலை கிறீஸ்துராசா விளை யாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இளவாலை மறைக் கோட்ட முதல்வர் தேவசகாயம்பிள்ளை, நிறுவன திட்ட இணைப்பாளர் எம்.பத்மகேசரி, பங்குத் தந்தை யர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (91)

## ஆலயங்களின் சுற்றாடலில் கொட்டப்படும் கழிவுகள்

சுதுமலை—

கற்கோவளம் கும்பிமுருகன் ஆலயம், கும்பி முத்துமாரி அம் மன் ஆலயம் ஆகியவற்றை அண் மித்துள்ள ஐஸ் தொழிற்சாலை யில் கழிவுகள் கொட்டப்பட்டு, துர்நாற்றம் வீசுவதாக இந்த ஆல யங்களின் பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

ஆலயங்களின் சூழலிலும், ஐஸ் தொழிற்சாலைக்குள்ளும் கழிவுகள் கொட்டப்படுவது டன், இயற்கைக் கடனும் கழிக் கப்படுவதால் பலத்த அசௌகரி யங்களை மக்கள் எதிர்கொள் கின்றனர்.

பருத்தித்துறை கற்கோவளத் திலுள்ள ஐஸ் தொழிற்சாலை கடந்த கால இராணுவ ஆக்கிர மிப்பினால் பாதிப்படைந்து செயலிழந்தும் போயுள்ளது.

இந்த ஆலயங்களின் சூழலை நல்ல முறையில் பேணும் வகை யில் - இவ்வாறான கீழ்த்தரச் செயற்பாடுகளை நிறுத்துமாறு கோரி, கிராம சேவையாளருக் கும் ஆலய பரிபாலன சபையி னர் கடிதம் அனுப்பியுள்ளதா கத் தெரிவிக்கப்படுகிறது. (91)

## விநாயக சஷ்டி அபிஷேகம்

மட்டுவில்—

விநாயக விரதத்தை முன் னிட்டு கல்வயல் ஆயிலடி வீர கத்தி விநாயகர் ஆலயத்தில் தின மும் மாலை 5.00 மணி முதல் விசேட அபிஷேகம், பூசை என் பன இடம்பெற்று வருகிறது. பிள்ளையார் கதை படிப்பும் கடந்த 16ஆம் திகதி முதல் இங்கு இடம்பெற்று வரு கிறது.

அதேபோல, கல்வயல் அம் பலவாணர் வீரகத்தி விநாயகர் ஆலயத்திலும் காலை விசேட அபிஷேகம், பூசை என்பவற்றோடு பிள்ளையார்கதை படிப்பும் இடம் பெற்றுவருகின்றது. (24)

## விண்ணப்ப திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம்—

வட இலங்கை சங்கீதசபை நடத்தும் 2006 ஆம் ஆண் டுக்கான பரீட்சை விண்ணப்ப முடிவுத் திகதி - எதிர்வரும் 21 ஆம் திகதிவரை நீடிக்கப்பட் டுள்ளதாக வட இலங்கை சங்கீத சபையின் இணைப்பாளர் மு.அருளையா தெரிவித்தார்.

இந்தப் பரீட்சைக்கு கடந்த வருடம்விண்ணப்பித்த பரீட்சார்த் திகளின் எண்ணிக்கையைவிட, மிகக் குறைந்த பரீட்சார்த்தி களே விண்ணப்பித்துள்ளதால் விண்ணப்பிக்காத பரீட்சார்த்தி கள் நன்மைகருதி கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

## குழிகள் செப்பனிடப்பட்டன

மட்டுவில்—

புனரமைக்கப்பட்ட நாவற் குழி பாலத்தின் இரு மருங்கிலு முள்ள வீதி செப்பனிடப்பட்டுள் ளது.

குன்றுங் குழியுமாகக் காணப் பட்ட இந்தப் பகுதி சீர்செய்யப் பட்டுள்ளதனால் போக்குவரத்து இலகுவானதாகக் காணப்படுகி றது. கைதடி பாலத்தில் அமைக் கப்பட்டதுபோல் இருமருங்கும் வேகத் தடைகள் அமைக்கப்பட் டால், விபத்துகளைத் தடுக்கக் கூடியதாக இருக்கும் எனப் பொதுமக்கள் கருத்துத் தெரி வித்தனர். (24)

## பூரணை தின விழா

கொக்குவில்—

கொக்குவில் ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரமம் நடத்தும் மார் கழி பூரணைதின விழா எதிர் வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பூரணைதினம், கார்த்திகைத் தீபம் தொடர்பாக மாணவர்க ளின் பேச்சும், "சிலையும் நானே சிற்பியும் நானே" என்ற வீடியோ படக்காட்சியும் இங்கு காண் பிக்கப்படவுள்ளது. (44)




ஜோசப் கிருஷ்ணாவின்

# எல்லைகள் எதுவென்பது புரியவில்லை


இர்பான் பதான் திறமையுடன் திமிர்சேரக்கூடாது

இது தேவையா இல்லையா அல்லது சரியா தப்பா என்று தீர்மானிக்க வேண்டியவர்கள் ரசிகர்களே. அதாவது கிரிக்கெட் உலகில் வார்த்தையாடல்கள் (WAR OF WORDS) அதிகரித்துப் போய் விட்டது என்று பெரும் ஆதங்கப்படும் ICC - இந்த நிலை மாறாவிட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் சட்டாம்பிள்ளைத் தனம் பேசி இருக்கிறது.

முன்பெல்லாம் போட்டிக்கு முன்னதான சவால்கள், வார்த்தையாடல்கள், எச்சரிக்கைகள் குத்துச்சண்டை உலகில் தான் காணப்பட்டன. சண்டையிடப் போகும் வீரர்களே பத்திரிகையாளர்களை அழைத்து அவர்கள் முன்னிலையில் இருவருமாக நின்று தத்தம் முகாமையாளர்களை இணைத்துக்கொண்டு சவால்கள் விடுவார்கள். இது ஒரு வியாபாரத் தந்திரம் என்பதும் ஒரு கருத்து. ஆனால் ரசிகர்களைக் கவர வெற்றிகரமாகக் கையாளப்பட்ட வழி என்பதில் இரு கருத்துக்கு இடமில்லை. தற்போது எழுந்துள்ள கிரிக்கெட் வார்த்தையாடல் சர்ச்சைகள் குத்துச்சண்டை பரிமாணத்தில் பார்க்கப்பட முடியாதது தான். இருந்தாலும் இதுவரை காலம் கட்டிக்காத்த ஒழுக்கம் கெட்டுவிடும் என்று ICC கவலைப்படுகின்றது.

எல்லா அணிகளும் இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகினும் அவுஸ்ரேலியாவும் (ஆச்சரியமேயில்லை) தென்னாபிரிக்காவும் விரல்சுட்டிக் காட்டப்படுகின்றன. இனியும் மைதானத்தில், மைதானத்துக்கு அப்பால் சொற்போர்களில் ஈடுபட்டால் நடுவர்களோ, மைதான மத்தியஸ்தர்களோ இனியும் சகித்துக் கொண்டிருக்கமாட்டார்கள் என்று ICC போர் முழக்கம் செய்திருக்கிறது. தென்னாபிரிக்க, அவுஸ்ரேலிய தொடர் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இவ்வேளையில் இவர்களுக்கிடையில் சொற்போர்கள் மிக அதிகரித்து விட்டதாகவும் இது கிரிக்கெட் சார்ந்த உயர் விழுமியங்களுக்கு பெரும் அச்சுறுத்தல் என்றும் எடுத்துக்காட்டப்படுகின்றது.

ICCயின் நிறைவேற்று அதிகாரியும், அவுஸ்ரேலியப் பிரசையுமான மல்கம் ஸ்பீட் கருத்துக்கூறுகையில்- இத்தகைய நடவடிக்கைகளால் தான் பெரிதும் விசனம் அடைந்திருப்பதாகக் கூறியிருக்கிறார். ஆஷஸ் தொடரைத் தொடர்ந்து வந்த காலம் இத்தகைய ஏற்றுக் கொள்ள முடியாத போக்கினை தெளிவாகச் சுட்டிக்காட்டி நிற்கிறது என்கிறார் அவர். தென்னாபிரிக்க, அவுஸ்ரேலிய தொடர் நடைபெற்றுவரும் இவ்வேளையில் விளையாட்டு வீரர்கள், முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் அனைவரும் ஒழுக்கத்தின் உயர்வு பற்றி எடுத்துக் கூற வேண்டிய நிலை ஏற்பட்டுத்தான் விட்டது என்கிறார் அவர். கடந்த ஒரு வருடத்தில் நடந்த ICC ஒழுக்க விதிகளை மீறிய செயல்களை எடுத்துக்கொண்டால், இவ்வருடம் அது இருமடங்காக அதிகரித்திருப்பதை இவர் சுட்டிக் காட்டுகின்றார்.

களத்தில் நிற்கும் வீரர்கள் பற்றி ICC கூறுவதில் உண்மையில்லாமல் இல்லை. இருந்தாலும் மைதானத்துக்கு வெளியே கூறப்படும் கருத்துக்களை எந்தளவுக்கு ICC கட்டுப்படுத்த முடியும் என்பதும் ஒரு கேள்விதான். மறுபுறம் முன்னாள் கிரிக்கெட் வீரர்களுக்கும் நாவடக்கம் வேண்டும் என்று ICC எச்சரிக்கை செய்வதென்பது எந்தளவு நியாயத்துக்கு உட்பட்டது என்பதைப் புரிந்துகொள்ள இயலவில்லை. ICCயுடன் தமது பொருளாதார வள மேன்மைக்காக இணைந்து கொண்டுள்ள மற்றும் பல்தேசிய விளம்பரக் கம்பனிகளின் கொழுத்த சம்பளப் படிகளுக்காக எதுவுமே பேசாமல் மௌனம் காக்கும் சில முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் எதையும் கண்டுகொள்ளாமல் இருக்கக் கூடும். அதற்காக தலைநிமிர்ந்து நியாயபூர்வமான குற்றங் குறைகளை எடுத்துக் காட்டும் முன்னாள் கிரிக்கெட் வீரர்களையும் அடக்கமாக இருக்கப் பழகிக்கொள் என்று ICC பிரம்பைக் காட்டுவதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவர்கள் தானே பல்வேறு உண்மைகளை அம்பலப்படுத்திக் கொண்டு வருகிறார்கள். கிரிக்கெட் ரசிகர்கள் அறியாத பல விடயங்களை வெளிக்கொணர்பவர்கள் இவர்களே. இன்னொரு வகையில் சொல்லப்போனால் வினைத்திறன் மிக்க ஒரு சர்வதேசக் கட்டமைப்பு எப்படி இருக்க வேண்டும், அங்கத்துவ நாடுகளுக்கு மத்தியில் பாரபட்சங்கள் எப்படிக் காட்டப் படுகின்றன, எந்த வகையில் வீரர்கள் நலன்கள் பேணப்படவேண்டும், கிரிக்கெட் நுட்பங்களை வளர்க்க என்ன செய்ய வேண்டும் என்று பல ஆக்கபூர்வமான கருத்துக்களைக் கூறும்போது அது அவர்களுக்குப் பிடிக்கவில்லை என்றால், வீரர்கள், அணிகள் மீது முன்னாள் வீரர்கள் கொண்டிருக்கும் கருத்துக்களைக் கூறினால், அது எப்படி தவறாக இருக்க முடியும்? அதற்கு மேலாக இவர்களை ICC எப்படிக் கட்டுப்படுத்த முடியும் என்பதும் புரியவில்லை. என்றாலும் சர்வதேச விளையாட்டுத் துறைகள் பல்வேறு திசைகளில் விரிசெடுத்துப் பரவும் வேளையில், கிரிக்கெட் பொறுத்து அதீத தலையீடுகள் எந்தளவு ஆரோக்கியமானது என்பது புரியத்தான் இல்லை.


மல்கம் ஸ்பீட் உங்கள் கண்களில் தூசி தெரிகிறதே

லிவிங்ஸ்ரனின்

# மல்லிகையும் ரோஜாவும்


பீலே எத்திசையிலும் இவன் புகழ்

மறுநாள் பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் சர்வதேச போட்டி ஒன்றிருந்தும் கூட, இங்கிலாந்தின் நட்சத்திரக் கிரிக்கெட் வீரர் அன்ரூ பிளின்ரொப் தன் நித்திரையைத் தொலைத்து தனக்கு அந்தப் பெருமை கிடைக்கும் என்று காத்திருந்தார். அவரது நம்பிக்கை வீண்போகவில்லை.


BBC நிறுவனம் LIVE நிகழ்ச்சியொன்றை நடத்தி அந்த வாக்கெடுப்பின் மூலம் SPORTS PERSONALITY OF THE YEAR விருதை தீர்மானிக்க முடிவெடுத்திருந்தது. இறுதியாக முடிவுகள் வெளிவந்த போது அன்ரூ பிளின்ரொப் அந்த விருதைத் தட்டிச் சென்றிருந்தார். அவுஸ்ரேலியாவை இங்கிலாந்து மண்ணில் வைத்து மண்கவ்வ வைத்த ஆஷஸ் தொடரை இங்கிலாந்து வெல்லக் காரணமாக இருந்தவர் அன்ரூ பிளின்ரொப். இதன் பின் திடீரென்று இங்கிலாந்தின் முதன்மை நட்சத்திரமாக உயாந்தவர் இவர். இதற்குப் பரிசாகவே இப்போது BBC விருதை பிளின்ரொப் தட்டிச் சென்றிருக்கிறார். ஒரு கிரிக்கெட் வீரர் என்ற வகையில் 24 வருடங்களுக்கு பின் இந்த விருதைப்பெறுகிறார் இவர். பாகிஸ்தானில் நின்ற இவருக்கு இந்த விருதை வழங்குபவர் இயன்பொத்தம் என்று அறிவிக்கப்பட்டபோது தான் மெய் சிலிர்த்துப் போனதாகக் கூறியிருக்கிறார். எனது ஆதர்ஷ கிரிக்கெட் வீரரே எனக்குப் பரிசளிப்பது அதுவும் 24 வருடங்களுக்கு முன் அவர் பெற்ற அதே விருதை இப்போது அவரது கையால் நான் பெறுவது மகத்தான சந்தர்ப்பம் என்று கூறி மகிழ்ந்திருக்கிறார் பிளின்ரொப். ஒரு அணியின் அங்கத்தவராக விளையாடுவது என்பது வேறு. ஆனால் ஒரு அணியில் உள்ளார்ந்து தோய்ந்து நனைந்து இரண்டு தசாப்தங்களின் பின் அவுஸ்ரேலியாவைத் தோற்கடிப்பதென்பது இன்னொன்று. அதையே நான் செய்தேன். அந்த வெற்றிக்கு இங்கிலாந்து மக்களும் பக்க பலமாக நின்று ஆதரவு தந்தார்கள் என்று உணர்ச்சி வசப்படுகிறார் பிளின்ரொப். இவர் ஆஷஸ் தொடரில் 24 விக்கெட்டுக்களை சரித்ததுடன் 402 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டவர். ஆஷஸ் தொடரில் இவரது பங்களிப்பு மிகப் பெரிதென்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொன்று.


அன்ரு பிளின்ரொப் இளமையெனும் பூங்காற்று

இதேவேளை ஆஷஸ் தொடரின் இன்னொரு நாயகன் ஷேன் வோன் தோல்வியைத் தழுவிய அவுஸ்ரேலிய அணியில் இவர் இருந்தாலும், மல்லிகையின் மணம் குறையவே இல்லை. ஆஷஸ் தொடரில் நாற்பது விக்கெட்டுகளைச் சரித்த ஷேன் வோன் சிறந்த வெளிநாட்டு PERSONALITY என்ற விருதைப் பெற்றிருக்கிறார். இன்னொரு விருதான வாழ்நாள் சாதனையாளர் என்ற விருது பிரேஸில் உதைபந்தாட்ட வீரர் பீலேக்கு வழங்கப்பட்டுள்ளது. 2012ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற விருப்பது லண்டன் மாநகரில். லண்டன் நகரம் இந்தச் சந்தர்ப்பத்தைப் பெற முதன்மைக் காரணியாக இருந்தவர் இங்கிலாந்தின் நெடுந்தூர ஓட்டப்பந்தய வீரர் செபாஸ்ரியன் கோ. இவருக்கும் BBC ரசிகர்கள் ஒரு விசேட பரிசை வழங்கிக் கௌரவித்துள்ளார்கள். பழமையில் என்றும் இளமை கொண்டது BBC. இந்த நிறுவன விருதுகள் பெறுவது பலரின் விருப்பம். ஆனால் அது சிலருக்கே நிறைவேறும். அந்தச் சிலரின் மிகச் சிலர் பற்றிய குறிப்புகளே மேலே தரப்பட்டன.

ஜெராட்டின்

# சச்சின் என்பது உயர்ந்ததொரு சிகரம்


சச்சின் டெண்டுல்கர் சாதனையால் சரியாதவன்

சச்சின் டெண்டுல்கர் அதிகம் உணர்ச்சி வசப்படுபவர் அல்ல என்று பொதுவாக ஒரு அபிப்பிராயம் உண்டு. எதையும் தனக்குள்ளேயே புதைத்துக் கொள்பவர். உதாரணம் சௌரவ் கங்கூலியால் அணித்தலைமை எனும் அதிகாரத்தை வைத்துக் கொண்டு சச்சின் பாதிக்கப்பட்ட போது அதையும் ஜீரணித்துக் கொண்டவர். ஆனால் தான் உணர்ச்சிவசப்பட்டது மிகக் குறைவான சந்தர்ப்பங்கள் தான் என்றாலும். இந்தச் சந்தர்ப்பம் முதன்மையானது என்கின்றார் சச்சின்.

அது இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் டெல்கி பெரோஸா கோட்லா மைதானத்தில் தனது முப்பத்தைந்தாவது டெஸ்ட் சதத்தின் நூறாவது ஓட்டத்தைப் பெற்றுக் கொள்ள ஓடிவந்த போது தெளிவாகத் தெரிந்தது. கவாஸ்கரின் சாதனையை முறியடித்த அந்த நிமிடத்தில் சச்சின் வானத்தை அண்ணார்ந்து பார்த்து மனம் கசிந்தபோது அவசரக் குடுக்கைகளான சில பத்திரிகையாளர்கள் அவர் இறைவனுக்கு நன்றி தெரிவித்தார் என்று எழுதியிருந்தார்கள். அவர் இறைவனையும் நினைத்திருப்பார் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் அந்தச் சந்தர்ப்பத்தில் தான் தனது விண்ணகத்தில் இருக்கும் தந்தையை அண்ணார்ந்து பார்த்து ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டேன். அவருக்கே அந்த செஞ்சரியை அர்ப்பணம் செய்தேன் என்கிறார்.

கடந்த டிசம்பரில் சுனில் கவாஸ்கரின் 34 செஞ்சரிகள் என்ற சாதனையைச் சமப்படுத்திய சச்சின் ஏறத்தாள ஒரு வருடத்தின் பின் உலக சாதனையை நிகழ்த்தி இருக்கிறார். எனது முதலாவது டெஸ்ட் செஞ்சரி என்னை மிகவும் உணர்ச்சி பூர்வமாக்கியது. அதேபோல் முப்பத்தைந்தாவது சாதனைச் செஞ்சரியும் என்னை உணர்ச்சி வசப்படுத்தியது என்று கூறியிருக்கிறார் சச்சின். பெரோஸா கோட்லா மைதானத்தில் கூடியிருந்த இருபதினாயிரம் ரசிகர்கள் வானதிர வாழ்த்தொலி எழுப்பியபோது. உலகம் முழுவதிலும் பல லட்சக் கணக்கான ரசிகர்களும் சேர்ந்து வாழ்த்தியிருப்பார்கள். இவர் தனது சதத்தை 279 நிமிடங்களில் பெற்றுக் கொண்டார். இதில் எதிர்கொண்ட பந்துகள் 177. பதின்மூன்று பவுண்டரிகளும் ஒரு சிக்சரும் இவரது சதத்துக்குள் அடங்கும்.


சுனில் கவாஸ்கர் நீ என்றும் வாழ்க

எனது மனைவிக்குத் தான் நான் நன்றி சொல்லவேண்டும். அவர் தான் "நீங்கள் சதம் போட வேண்டும் என்ற சுமையுடன் மைதானத்துக்குள் நுழைய வேண்டாம்" என்று ஆலோசனை கூறினார். அந்த ஆலோசனை தான் சதத்தையே எனக்குத் தந்ததென்று கூறுகிறார் சச்சின்.

இந்தச் சாதனை சச்சினுக்கே உரியது என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. ஆனால் சிறிது தாமதமாகிவிட்டது என்பதென்னவோ உண்மை தான். அதேவேளை அவருக்கு ஏற்பட்ட உபாதைகளும். நோயும் தான் மீண்டும் சச்சினை விஸ்வரூபம் எடுக்கச் செய்தது என்பதையும் மறுப்பதற்கில்லை. ஒரு திறமைசாலியை எந்தத் தடையும் வீழ்த்திவிட முடியாது என்பதற்கு சச்சினுடைய சாதனை ஒரு சான்று. சச்சினுடைய வெற்றிப் பயணம் இன்னும் தொடரட்டும்.

நிர்மலனின்

# படை நடத்தி வாகை சூடுவோமா?



அர்ஜுன ரணதுங்க நேர்கொண்ட பார்வை

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் எமது பிராந்திய போட்டிகள் என்ற வகையில் மிகவும் சுவாரஸ்யமானவை. இப்போட்டிகள் 2006ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் பாகிஸ்தானில் நடைபெறவிருந்தது. இதன் மூலம் மிகப்பெரிய பண வருமானம் ஒன்று ஆசிய கிரிக்கெட் சபைக்கு கிடைப்பதும் நிட்சயமானதொரு விடயமாக இருந்தது. இதன்மூலம் இருவழி நலன்கள் கிரிக்கெட் பொறுத்து தீர்மானிக்கப்பட்டிருந்தன. ஒன்று கிரிக்கெட் பலம் பொருந்திய நாடுகளுக்கான நிதி உதவிகள். அடுத்தது ஆசியக்கண்டத்திலுள்ள வளர்ந்து வரும் கிரிக்கெட் விளையாடும் நாடுகளின் அடிக்கட்டுமானத்தை ஸ்திரப்படுத்த நிதி உதவி புரிதல். இப்போது என்னவென்றால் இந்த இரண்டுமே நடைபெறாது போய்விட்டது. இதற்கு முதன்மையான காரணம் இந்தியா தனது நெருக்கடியான அட்டவணையை முன்வைத்து ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளைத் தள்ளிப்போடும்படி கேட்டுள்ளது. அந்தக் கோரிக்கை நியாயபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதாகவே உள்ளது.

இம்முறை நடைபெறவிருந்த ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் இலங்கை . இந்தியா. பாகிஸ்தான். பங்களாதேஷ். ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் ஓமான் ஆகிய நாடுகள் பங்கு பற்றுவதாக இருந்தன. ஆனால் இந்தியா பங்கு கொள்வதில் ஏற்பட்ட தடங்கலால். அதனைத் தொடர்ந்து ஏனைய நாடுகளுக்கு சர்வதேச கிரிக்கெட் கடப்பாடுகள் இருப்பதால். 2008ஆம் ஆண்டில் தான் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் நடைபெறும்.

இந்த இடத்தில் ஒன்றைக் குறிப்பிடலாம். 2007ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளுக்கு முன்பாக இவ் ஆசியக் கிண்ணப் போட்டிகள் நடைபெற்றிருந்தால் சிறப்பாக இலங்கை. இந்தியா. பாகிஸ்தான் போன்ற நாடுகள் நல்லதொரு பயிற்சியைப் பெற்றிருக்க வாய்ப்பிருந்திருக்கும். ஆனால் அந்தச் சந்தர்ப்பம் பறிபோய்விட்ட நிலையையே இப்போது காண முடிகின்றது.



வசீம் அக்ரம் நிமிர்ந்த நன்நடை

ICC யின் அட்டவணைகள் சர்வதேச அட்டவணைகள் என்ற வகையில் கௌரவப்படுத்தப்படவேண்டியவை என்ற வகையில் மறுப்பேதும் இல்லை. ஆனால் எல்லா சர்வதேச நாடுகளும் அட்டவணைகள் மிகுந்த நெருக்கடியாக உள்ளதாக ஓலமிடுகின்றன. இதேவேளை மூன்று ஒருநாள் சுற்றுப் போட்டிகள் ஐந்து ஒருநாள் போட்டிகளாக மாறி இப்போது ஏழு ஒருநாள் போட்டிகளாக பரிணமித்துப் பெருத்துப்போய் இருக்கின்றன. இவற்றுக்கு ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டால். ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் போன்ற எங்கள் வீட்டு விடயங்கள் அடிபட்டுப் போகாமல் காப்பாற்றலாம் அல்லவா? இதற்கு சகல சர்வதேச கிரிக்கெட் நாடுகளும் ஒன்றிணைந்து குரல் எழுப்பினால். ICC யில் ஆதிக்கம் செலுத்தும் வெள்ளை இனத்தவர்கள் ஒரு அழுத்தத்துக்கு உள்ளாவார்கள் அல்லவா.

இந்த விடயம் பற்றிக் கூறும்போது தைரியமாக எடுத்துக் கூறக்கூடிய முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் சிலர் நினைவுக்கு வருகிறார்கள். இம்ரான் கான். வசீம் அக்ரம். அர்ஜுன ரணதுங்க போன்ற வீரர்கள் ஒருசிலர் தான் தைரியமாக, நியாயபூர்வமான கருத்துக்களை முன்வைக்கிறார்கள். இவர்களுக்கு உறுதுணையாக ஆசிய கிரிக்கெட்டின் முன்னாள் இந்நாள் முன்னணி வீரர்கள் குரல் கொடுத்தால் ஆசியக் கொடி உயரப் பறக்காதா என்ன?

மக்டலினின்

# புதுப்புனல் பாயட்டும்



மாவன் அத்தப்பத்து சுமை என்று நினையாதே

இலங்கை அணி இந்தியாவுடனான மூன்று டெஸ்ட் போட்டிகளுக்குச் சென்றது தொடக்கம் இலங்கை எவ்வாறு போட்டியில் பிரகாசிக்கும் என்ற விடயத்துக்கு அப்பால் தெரிவாளர்கள் என்னென்ன பிழை செய்தார்கள், ஜெயசூரிய ஏன் அணியில் இருந்து நீக்கப்பட்டார் என்று விவாதங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. ஜெயசூரிய நீக்கப்பட்டதன் பின்னணி என்பது பற்றி ஆராய ஒரு குழு நியமிக்கப்படும் என்பதாக ஒரு செய்தி, அப்படி அல்ல என்றொரு செய்தி. மறுபுறம் இலங்கை உள்ளூர்ப் போட்டிகளில் சக்கைபோடு போடும் ஜெயசூரிய இந்தியாவில் பந்து வீச்சாளரிடம் மடங்கிப் போனது ஏன் என்றவாறான கேள்விகளும், மீண்டும் ஜெயசூரியவிற்கான எழுச்சிக்கு வித்திடப் போகின்றன. தற்போது நடைபெறும் உள்ளூர்போட்டிகள் என்ற கருத்துப்பட இப்படியாக ஒரே சர்ச்சைகள்.

இன்னொருபுறம், உதவித் தலைவராக இருந்த மஹேல ஜெயவர்த்தனவை நீக்கிவிட்டு சமிந்தவாஸ் உபதலைவராக நியமிக்கப்பட்டார். சமிந்தவாஸ் அற்புதமாகப் பந்துவீசினார். முதல் டெஸ்டில் நான்கு விக்கெட்டுகளை 21 ஓட்டங்களுக்குச் சரித்தார். அதிலும் பதினொரு MAIDEN ஓவர்களைத் தொடர்ச்சியாகப் பெற்றார். இதேவேளை மஹேல ஜெயவர்த்தன எழுபத்தொரு ஓட்டங்களை எண்பது பந்துகளில் விளாசித்தள்ளினார். இங்கு சமிந்தவாஸின் தெரிவு சரி, மஹேல பதவியிறங்கியமை பிழை என்பதாகப் போய்விட்டது.



ரொம் மூடி பனிபோல் விலகும்

மறுபுறம் ஜெயசூரியவின் இடத்துக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகச் சென்ற அவிஸ்க குணவர்த்தனவிற்கு இதுவே கடைசி டெஸ்ட் தொடராக இருக்கும் போலத் தெரிகின்றது. எதிர்பார்ப்புகளை எல்லாம் ஏமாற்றம் என்ற வகையிலேயே தந்து கொண்டிருக்கிறார் அவர். மறுபுறம் ஜெஹான் முபாரக். இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை மீளமுடியாத நிலையில் இவர் மட்டுமல்ல இன்னும் ஒரு சிலரின் தெரிவுக்கு, தெரிவாளர்கள் எந்த ஒரு நியாயமான காரணத்தையும் காட்ட முடியாமல் திக்குமுக்காடிப் போகிறார்கள்.

இது ஒருபுறம் இருக்க, சனத்ஜெயசூரியவை அணியில் இருந்து நீக்கிய விடயம் தனக்குத்தெரியாமலே நடந்திருக்கிறது என்று இலங்கை அணித் தலைவர் மாவன் அத்தபத்து இந்தியாவில் இருந்து தெரிவித்திருக்கிறார். இலங்கை கிரிக்கெட் சார்ந்த விடயங்கள், கிரிக்கெட் அணியின் வகைகூறும் தன்மை என்பனவெல்லாம் தற்போது நிரம்பவும் குழப்ப நிலையில் இருப்பதாகத் தெரிகிறது. இந்த நிலைக்கு இலங்கை அணி உள்ளாக வேண்டிய தேவையே இல்லை என்பது பெரும்பான்மையானவர்களின் கருத்து.

எனவே இலங்கை அணி இந்திய டெஸ்ட் தொடரை முடித்துக்கொண்டு வந்ததும் பல்வேறு செயற்பாடுகள் முதன்மைப்படுத்தப்பட்டு செய்யப்பட வேண்டும். இலங்கை அணிக்கு இது ஒரு தற்காலிகப் பின்னடைவு என்பதை நிரூபிப்பதாக செயற்பாடுகள் அமைய வேண்டும். களையப்பட வேண்டியன களையப்பட, சேர்க்கப்பட வேண்டியன சேர்க்கப்பட வேண்டும். நல்ல தொரு பயிற்றுனர் ரொம் மூடி அவரும் இந்தச் சூழலில் அநியாயமாகச் சிக்கி வீண் துன்பத்திற்கு ஆளாகிக் கொண் டிருக்கிறார்.

விமலனின்

# அம்பலமாகாத அதிசயம்

இந்த மாதம் 10ஆம் திகதி அவுஸ்ரேலிய – நியூசிலாந்து அணிகளுக்கிடையில் கிறிஸ்சேர்ச்சில் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் போட்டியில் உலக சாதனையொன்று நிகழ்த்தப்பட்டிருந்தபோதும் அதனை ஊடகங்கள் எதுவும் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை.

ஒருநாள் போட்டியொன்றில் இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாடி வெற்றிபெற்ற உலக சாதனையாக அமைவது – 2001/02 காலப்பகுதியில் தென்னாபிரிக்காவின் போர்ட் எலிசபெத் நகரில் நடைபெற்ற அவுஸ்ரேலிய – தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான ஒருநாள் போட்டியாகும். இந்தப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 50 ஓவர்களில் 329 ஓட்டங்களை அநாயாசமாகக் குவித்திருந்தது. ஆனாலும் 330 ஓட்டங்கள் என்ற இந்தக் கடின இலக்கை அவுஸ்ரேலிய அணி 49.1 ஓவர்களிலேயே 7 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து, 3 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று உலக சாதனை படைத்தது. கிறிஸ்சேர்ச் போட்டிக்கு முன்புவரை இதுவே உலகசாதனையாக பதிவில் இருந்தது.

ஆயினும் கிறிஸ்சேர்ச் ஒருநாள் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட் இழப்புக்கு 331 ஓட்டங்களைக் குவித்திருந்தது. ஏற்கனவே முதலிரு போட்டிகளிலும் தோல்வியடைந்த நியூசிலாந்து அணியினருக்கு இந்த இமாலய இலக்கு நிர்ணயிக்கப்பட்டதும், ரசிகர்கள் இந்தப் போட்டியிலும் நியூசிலாந்து மண் கவ்வும் என்றே எண்ணியிருப்பார்கள். அது அவர்கள் தவறல்ல.

ஆனாலும் நியூசிலாந்து அணி 49 ஓவர்களிலேயே 8 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து சுலபமாக வெற்றி இலக்கான 332ஐ எட்டியது. இந்த வெற்றி நியூசிலாந்து அணிக்கு தனியொருவரால் கிடைக்கப் பெற்றது என்று கூறிவிட முடியாது. இதில் நியூசிலாந்து வீரர் ஒருவர்கூட சதம் அடிக்கவில்லை. நியூசிலாந்து அணி சார்பில் விக்கெட் காப்பாளர் மக்கலம் ஆட்டமிழக்காமல் பெற்ற 50 ஓட்டங்களே அதிகூடிய ஓட்டமாக இருந்தது.



உண்மை ஒருநாள் வெளியாகும் அதில் உள்ளங்கள் யாவும் தெளிவாகும்

வழமையாக இவ்வாறான அதிரடிச் சாதனையொன்றை சூட்டோடு சூடாக புகழ்ந்து தள்ளும் ஊடகங்கள் இந்தச் சாதனையில் மட்டும் கண்டும் காணாமல் இருந்துள்ளமை ஏனென்று புரியவில்லை.

மறுபுறம் ஒருநாள் போட்டியொன்றில் அதிக ஓட்டங்கள் பெறப்பட்ட (இரண்டு அணிகளினதும் ஓட்ட எண்ணிக்கையைச் சேர்த்து) சந்தர்ப்பமாக இந்தப் போட்டி அமையவில்லை என்பது என்னவோ வாஸ்தவம் தான். அந்தச் சாதனைக்குரிய போட்டியாக அமைவது சென்ற வருடம் இந்திய அணி பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணத்தை மேற்கொண்டபோது கராச்சியில் நடைபெற்ற முதல்போட்டியாகும்.

இந்தப் போட்டியில் முதலில் ஆடிய இந்திய அணி 7 விக்கெட் இழப்புக்கு 349 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதனையடுத்து இரண்டாவதாக துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 50 ஓவர்கள் நிறைவில் 344 ஓட்டங்களைப் பெற்று 5 ஓட்டங்களால் மயிரிழையில் வெற்றியை நழுவவிட்டிருந்தது. ஆக மொத்தம் இந்தப் போட்டியிலேயே 693 ஓட்டங்கள் குவிக்கப்பட்டிருந்தன. இதுவே இன்று வரை உலக சாதனை எண்ணிக்கையாகவும் காணப்படுகிறது.

கிறிஸ்சேர்ச் போட்டியில் மொத்தம் 663 ஓட்டங்கள் மாத்திரமே பெறப்பட்டிருக்கின்றதனால், இந்தப்போட்டி மொத்த ஓட்ட எண்ணிக்கை என்ற உலக சாதனைக்குரிய இடத்தைப் பெறவில்லையென்பதில் எவ்வித சர்ச்சைகளும் இல்லை.

இருப்பினும் இந்தப் போட்டியில் தோல்வி கண்டது உலக சம்பியனான அவுஸ்ரேலிய அணி என்பதனாலோ என்னவோ தெரியவில்லை, நியூசிலாந்து அணி இரண்டவதாகத் துடுப்பெடுத்தாடிப்பெற்ற உன்னத உலக சாதனையை ஊடகங்கள் கண்டு கொள்ளவில்லைப் போலும்.

விளையாட்டு அரங்கம்

EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com

# காவல்துறையின் சீர்திருத்தப் பிரிவை சர்வதேச செஞ்சிலுவைக் குழு சந்திப்பு



கிளிநொச்சி

தமிழீழ காவல்துறையின் சீர்திருத்தப் பிரிவினரை சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

கடந்த வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் தமிழீழ காவல்துறை சீர்திருத்தப் பிரிவு ஆனந்தபுரம் சிறைக் கூடத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட வதிவிடப் பிரதிநிதியான பெரினிக் குழுவினரே தடுப்புக் காவலிலுள்ள கைதிகளைப் பார்வையிட்டுக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பில் சீர்திருத்தத்துறைக் கண்காணிப்பாளர்' போராளி வே.அரவிந்தன் மற்றும் ஆனந்தபுரம் சிறைக்கூடப் பொறுப்பாளர், துணை ஆய்வாளர் இ.திருக்குமாரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## மன்னார் பகுதியில் சோதனை அதிகரிப்பு

மன்னார்

மன்னார் - பேசாலைப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற குண்டுத் தாக்குதலுக்குப் பின்னர் அந்தப் பகுதியில் திடீர் சோதனை, சுற்றிவளைப்புக்களும் நடைபெற்றன.

இந்தப் பகுதியில் படையினர் வாகனங்களில் செல்லும் மக்களை மறித்து இறக்கி அடையாள அட்டைச் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேசமயம் - மன்னாரிலுள்ள அனைத்துக் காவலரண்களும் பலப்படுத்தப்பட்டுள்ளதால் அந்தப் பகுதி மக்கள் அச்சத்துக்குள்ளாகியுள்ளனர்.

இது தவிர மன்னார் நகரத்திலும் இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரும் அதிகமான அளவு குவிக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகிறது.

## விவசாய அமைப்பின் செயற்பாடுகள் தொடர்பான முக்கிய கலந்துரையாடல்

வட்டக்கச்சி

வட்டக்கச்சி பிரதேச விவசாய அமைப்புகளுடனான சந்திப்பு வட்டக்கச்சி கமநல சேவை நிலையத்தில் கடந்த புதன்கிழமை மாலை 3 மணியளவில் வட்டக்கச்சிப் பிரதேச பொருண்மிய இணைப்பாளர் றொஜிட் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கருத்துரைகளை பெரும்போக உத்தியோகத்தர் கதிர்காமநாதர், வட்டக்கச்சிப் பிரதேச பொருண்மிய இணைப்பாளர் றொஜிட் ஆகியோர் நிகழ்த்தினர்.

இதில் விவசாய அமைப்புகளின் செயற்பாடுகள், திட்டமிடல்கள் தொடர்பான முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டதுடன். இந்தப் பிரதேசத்தில் காலபோக நெற்செய்கையை இடைப்போகமாக மேற்கொள்வது பற்றிய ஆலோசனைகள், திட்டமிடல்கள் போன்ற செயற்பாடுகள் பற்றியும் கலந்தாலோசிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பெரும்போக உத்தியோகத்தர் கதிர்காமநாதர், விவசாய போதனாசிரியர் பிரபாகரன், விவசாய அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (12)

# மன்னார் மாவட்ட விவசாயிகளின் உரத் தட்டுப்பாட்டை உடன் நீக்குக!

## ஜனாதிபதிக்கு கடிதம்

மன்னார்

அரசு வழங்கிய வாக்குறுதியைத் தொடர்ந்து உரத்தின் விலை குறையும் என்ற காரணத்தால் மன்னார் பகுதியில் உரம் விற்பனை செய்வோர் களஞ்சியப்படுத்தத் தயக்கம் காட்டுவதால் உரத்துக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இதனால் காலபோக பயிர்ச்செய்கையை மேற்கொண்டுள்ள விவசாயிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர் என மன்னார் மாவட்ட விவசாய அமைப்புச் சம்மேளன தலைவர் சீ.சௌந்தரநாயகம் - ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

ஜனாதிபதியால் வாக்குறுதி அளிக்கப்பட்ட பின்னர் 50 கிலோ கொண்ட (சகல வகை உரங்களும்) மூடை ஒன்று 350 ரூபாப்படி நெற்செய்கையாளருக்கு வழங்கப்படும் என்ற செய்தி கேட்டு மன்னார் விவசாயிகள் மிக்க மகிழ்ச்சி அடைந்தனர்.

தற்பொழுது மன்னார் மாவட்டத்தில் 2005-2006ஆம் ஆண்டு காலபோக நெற்செய்கை தீவிரமாக நடைபெற்று வருகின்றது. அத்துடன் புழுதி வேளாண்மையும் ஒன்றரை மாதத்தைக் கடந்து விட்டது. ஆனால், உரத்தின் விலை குறையப் போகிறது என இந்தப் பகுதி கமநல கேந்திர நிலையங்களோ, பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களோ, மற்றும் தனியார் துறையினரோ உரங்களைக் களஞ்சியப்படுத்தத் தயக்கம் காட்டி வருகின்றன. இதனால் இந்தப் பகுதியில் உரத்தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

தற்போது இந்த மாவட்டத்தில் வி.1 அடிக்கட்டு உரம் 50 கிலோ 1380 ரூபாவாகவும், யூரியா மேல் கட்டு உரம் 680 ரூபாவாகவும், ரி.டி.எம் மேல் கட்டு உரம் 1140 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இந்த விலை கொடுத்தே விவசாயிகள் உரம் வாங்குகின்றனர். பலர் உரம் போடாமல் நெற்செய்கையை மேற்கொண்டு வருவதால் பெரும் பாதிப்பு ஏற்படவுள்ளது.

எனவே, உடனடியாக இந்தப் பகுதி விவசாயிகளுக்கு குறைந்த விலையில் உரம் கிடைக்கச் செய்ய வேண்டுமாயின், கமநல அபிவிருத்தித் திணைக்களத்துக்கு உரித்தான உரக்களஞ்சியம் இவற்றைக் களஞ்சியப்படுத்தி விவசாயிகளுக்கு குறைந்த விலையில் விநியோகிக்க வேண்டும் எனவும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'சிறையில் பூத்த உணர்வின் ஒளி' கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா

கிளிநொச்சி

களுத்துறைச் சிறைச்சாலையிலுள்ள அரசியல் கைதி கல்லடி றெபேட்டின் 'சிறையில் பூத்த உணர்வின் ஒளி' கவிதைத் தொகுதி வெளியீட்டுவிழா-இன்று மாலை 3.30 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எழுகலை இலக்கியப் பேரவையின் தலைவர் பு.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் சிறப்புரையை தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் நிகழ்த்தவுள்ளார்.

நூலின் ஆய்வுரையை போராளியும் கலை இலக்கியப் படைப்பாளியுமான மலைமகளும் வெளியீட்டுரையைப் பிரபல எழுத்தாளர் ஆதிலட்சுமி சிவகுமாரும் நிகழ்த்துவர். பதிலுரையை தமிழீழ சட்டக் கல்லூரியைச் சேர்ந்த சட்டவாளர் க.ஜெகதீஸ்வரன் நிகழ்த்தவுள்ளார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கலை இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நூல் 26-12-2004 அன்று சுனாமியால் உயிரிழந்த அனைவருக்கும் சமர்ப்பணம் செய்யப்படவுள்ளது.

# காலச் சுவட்டில்...

## இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

### டிசெம்பர் - 18

1787: அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நியூஜெர்சி மூன்றாவது மாநிலமாக இணைந்தது.

1865: அமெரிக்காவில் சட்டபூர்வமாக கொத்தடிமை முறை ஒழிக்கப்பட்டது.

1903: பனாமா கால்வாய்ப் பகுதியை ஆண்டு வாடகை கொடுப்பதாக ஒப்பந்தம் செய்துகொண்ட அமெரிக்கா நிரந்தரமாகத் தனது நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்தது.

1909: புளோரிடாவில் ஜாக்ஸன் வில்லிக்கு கிழக்கே பெர்முடா முக்கோணப் பகுதியில் மாகி எஸ் ஹார்ட் என்னும் பாய்மரக் கப்பல் எட்டுப் பேருடன் காணாமற்போனது.

1910: உலகிலேயே முதன் முதலாக இரவு வேளையில் வர்ணப் புகைப்படம் எடுக்கப்பட்டது. பாரிஸில் நியான் விளக்குகளினால் அலங்கரிக்கப்பட்டிருந்த கிராண்ட் பாலஸ் இரவு நேரத்தில் வர்ணப் புகைப்படம் பிடிக்கப்பட்டது.

1912: படிப்பறிவு இல்லாதவர்கள் அமெரிக்காவில் குடியேறுவதைத் தடுக்கும் சட்டத்தை அமெரிக்க காங்கிரஸ் நிறைவேற்றியது.

1917: இந்தியாவில் முதன்முதலாக பெண்ணுரிமைகளுக்காக இந்திய தேசாதிபதி செம்ஸ் ஃபோர்ட் பிரபுவையும், ஈ.எஸ். மொண்டேகுவையும் சந்தித்த சரோஜினி நாயுடு தலைமையிலான 14 பெண்கள் கொண்ட குழு ஆண்களுக்கு நிகராகப் பெண்களுக்கும் வாக்குரிமையளிக்கவேண்டும் என்றும், உயர் கல்வி வசதிகளும், மருத்துவக் கல்வி வசதிகளும் ஏற்படுத்தித் தரவேண்டும் என்றும் கோரி மனு சமர்ப்பித்தனர்.

1920: சிரியா - பாலஸ்தீன எல்லைக் கோட்டை பிரான்ஸும், பிரிட்டனும் ஒத்துக் கொண்டன.

1922: முதன் முதலாக பிரிட்டன் நீதிமன்றம் ஒன்றில் பெண் வழக்கறிஞர் செல்வி ஹெலீனா நொர் மண்டன் என்பவர் வாதாடினார்.

1938: ஜேர்மனியைச் சேர்ந்த விஞ்ஞானி ஒட்டோ ஹான் யுரேனியம் அணுவைப் பிளந்து ஆற்றலை வெளிப்படுத்தினார்.

1941: ஹொங்கொங் தீவில் ஜப்பானியப் படை தரையிறக்கம்.

1949: இலங்கையில் தமிழரசுக் கட்சி தோற்றம் பெற்றது.

1956: ஐக்கிய நாடுகள் சபையில் ஜப்பான் உறுப்பினராகச் சேர்ந்து கொண்டது.

1958: அமெரிக்கா - 101 நிமிடங்களுக்கு ஒருமுறை நீள்வட்டப் பாதையில் புவியைச் சுற்றிவரும் வகையில் ஸ்கோர் என்னும் தகவல் தொடர்பு செயற்கைக் கோளை ஏவியது. அமெரிக்க ஜனாதிபதி ஐஸன் ஹோவர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை இதன் மூலம் எதிரொலிக்கப்பட்டது. விண்ணிலிருந்து புவியை நோக்கி மனிதக் குரல் முதன் முதலாக இந்தச் செயற்கைக்கோள் மூலமாகத்தான் எதிரொலிக்கப்பட்டது.

1969: கொலைக் குற்றத்திற்கு மரண தண்டனை விதிக்கும் முறை பிரிட்டனில் ஒழிக்கப்பட்டது.

1972: வட வியட்நாம் மீது அமெரிக்கா மீண்டும் விமானத் தாக்குதலை ஆரம்பித்தது. ஹனோய் மீதும், ஹைபாங் மீதும் மிகப் பாரிய அளவில் குண்டு வீச்சு நடத்தப்பட்டது.

1975: ப்ளோரிடா அருகே இம்போராஸ் என்னும் எண்ணெய்க் கப்பல் 22 ஊழியர்களுடன் கனடாவை நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் பெர்முடா முக்கோணப் பகுதியில் காணாமல் போனது.

1979: மணிக்கு 1190.35 கி.மீ. வேகத்தில் அதாவது ஒலியை விஞ்சும் வேகத்தில் கலிபோர்னியாவைச் சேர்ந்த ஸ்டான்லி பாரட் என்பவர் தனது காரை ஓட்டிச் சாதனை படைத்தார். ஒலியை மிஞ்சும் வேகத்தில் காரை ஓட்டிச் சாதனை படைத்த முதல் மனிதர் இவர் தான்.

1991: இந்தியாவில் காவிரி நீர்ப் பிரச்சினையால் பெங்களூரில் பெரும் கலவரம் மூண்டது. ஏரானமான தமிழர்கள் அங்கிருந்து இடம் பெயர்ந்து தமிழகம் வந்துசேர்ந்தனர்.

1995: இந்தோனேசியாவும், அவுஸ்ரேலியாவும் பாதுகாப்பு உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டன.

தொகுப்பு:- சந்துரு

# கமநல சேவை நிலையத்தில் புதிய இயந்திரங்கள் அறிமுகம்

வட்டக்கச்சி

வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனமும், விவசாயத் திணைக்களமும், ஜினசேன கம்பனியும் இணைந்து வட்டக்கச்சி கமநல சேவை நிலையத்தில் புதிய இயந்திரங்களை அறிமுகப்படுத்தியுள்ளன. இந்த அறிமுக விழா பெரும்போக உத்தியோகத்தர் கதிர்காமநாதர் தலைமையில் நடைபெற்றது.

அறுவடை செய்யும் இரு சக்கர உழவு இயந்திரம், வேப்பங்குழை, இலுப்பங்குழை போன்றவற்றை அரைக்கும் கருவி, புதிய வகை மோட்டார் சைக்கிள், சூடு அடிக்கும் இயந்திரம் போன்றனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவன முகாமையாளர் புவனேஸ்வரன், பெரும்போக உத்தியோகத்தர் கதிர்காமர், விவசாய பாடவிதான உத்தியோகத்தர் செல்வராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன் விவசாய சம்பந்தமான வினாடி-வினாப் போட்டியும் நடைபெற்று, அதில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (12)

நமது ஈழநாடு

வைர வரிகள்

குடிசெய்தல் என்னும் ஒருவர்க்கு தெய்வம்
மடிதற்று தான் முந்துறும்.
- திருக்குறள் -

## நமது நோக்கு

# மகிந்தவின் இன்னொரு 'பொறி'

ஆசிய நாடொன்றில் மட்டுமே சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டும் என்று ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளுடன் இணைந்து மகிந்த ராஜபக்ஷ வின் அரசாங்கம் எடுத்த முடிவுக்கு விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது.

போர்நிறுத்த உடன்பாட்டை செம்மையாக நடைமுறைப் படுத்துவது தொடர்பாக பேச்சு நடத்தப்படவேண்டும் என்று கடந்த பல மாதங்களுக்கு முன்னரே அரசும் புலிகளும் இணங்கியிருந்தபோதும் -

உள்நாட்டிலேயே அதுவும் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் தான் நடைபெறவேண்டும் என அரசாங்கம் நிபந்தனை விதித்ததால் இன்றுவரை அது சாத்தியமற்றதாகவே இருந்து வருகிறது.

இந்தப் பேச்சுக்களை முன்னெடுக்க நோர்வே முயற்சிகளை மேற்கொண்டபோதும் - அரச தரப்புத் தடைகளாலும், ஜனாதிபதித் தேர்தலாலும் எல்லாமே முடங்கிப் போயிருந்தன.

இப்போது புதிய அரசு, புதிய சிந்தனை என்று தென்னிலங்கை சூழல் மாற்றம் பெற்றிருக்கிறது. நோர்வேயை அகற்றிவிட்டு சமாதான ஏற்பாட்டாளராக இந்தியாவைக் கொண்டுவர மகிந்த ராஜபக்ஷ அரசு முனைகிறது.

அது தோல்வி கண்ட பின்னர்தான் நோர்வேயிடம் சரணடைந்தது. ஆனாலும், ஐரோப்பிய நாடுகளில் பேச்சுக்கள் நடத்தப்படக்கூடாது என்றும், ஆசிய நாட்டில்தான் பேச்சு நடத்த வேண்டும் என்றும் அரசு நிபந்தனை விதித்து வருகிறது.

அரசின் இந்த யோசனையைப் புலிகள் தரப்பில் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நிராகரித்துவிட்டார்.

ஐரோப்பிய நாடு ஒன்றில்தான் முதற்கட்டப் பேச்சுக்கள் நடைபெறவேண்டும் என்பதில் புலிகள் தமது உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

புலிகளின் இந்த முடிவுக்கு என்ன காரணம் என்றால் - சர்வதேச சமூகத்துடன் புலிகளுக்கு இருக்கும் தொடர்பைத் துண்டிக்க இலங்கை அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளை முறியடிப்பதுதான்.

சமாதானப் பேச்சுக்கள் மற்றும் அரசியல் விவகாரப் பயணங்கள் என்பவற்றின் மூலம் ஐரோப்பிய நாடுகளில் புலிகள் கணிசமான இராஜதந்திரத் தொடர்புகளை ஏற்படுத்திவிட்டனர். அதனால் தமது பொய்ப்பிரசாரங்கள் எடுபடாமற்போய்விடும் என்று அஞ்சிய முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் - உள்நாட்டில்தான் பேச்சுக்கள் நடத்த வேண்டும் எனப் புலிகளுக்குப் பொறி வைத்தார்.

ஆனால், அதற்குள் புலிகள் விழாமல் தப்பிவிட - சந்திரிகாவின் ஆட்சியும் முடிவுக்கு வந்துவிட்டது.

இப்போது கதிர்காமரின் வெளியுறவுக் கொள்கைகளைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு - புலிகளைச் சர்வதேச சமூகத்திடம் இருந்து ஓரங்கட்டும் நடவடிக்கைகளில் மகிந்த ராஜபக்ஷவின் அரசும், அவரது கூட்டணிக் கட்சிகளும் ஈடுபட்டு வருகின்றன.

நோர்வேயை அகற்றுதல், இந்தியாவை உள்ளே கொண்டு வருதல், ஆசிய நாடொன்றில்தான் பேச்சுவார்த்தை என அடுக்கடுக்காக இவர்கள் திட்டங்களை வைத்துக்கொண்டிருக்கின்றனர்.

ஒரு புறத்தில் ஐரோப்பிய நாடுகளில் புலிகளைத் தடை செய்ய வேண்டும் என்று தீவிர பிரசாரங்களை முன்னெடுக்கும் சூழலில் - அதே ஐரோப்பிய மத்தியஸ்தர்களுடன் ஆசிய நாட்டில் பேச்சுக்களை நடத்தவேண்டும் என்ற அபத்தமான முயற்சிகளில் அரசாங்கம் இறங்கியிருக்கிறது.

ஐரோப்பிய நாடுகளில் புலிகளைத் தடைசெய்வதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ள அரசு - சர்வதேச சமூகத்துக்கும் புலிகளுக்குமிடையிலான தொடர்புகளையும் துண்டிப்பதற்கு எத்தனிக்கிறது.

இதன் காரணமாகவே ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாசியையும் கிளிநொச்சிக்குச் சென்று புலிகளுடன் பேச்சு நடத்த விடாமல் தடுத்துவிட்டது.

வன்னிக்குள் புலிகளின் ஒட்டுமொத்த அரசியல் நடவடிக்கைகளையும் முடக்கிவிட்ட பின்னர் - அவர்களுக்குச் சுலபமாக பயங்கரவாதப்பட்டம் சூட்டிவிடலாம் என அரசு கனவு காண்கிறது.


இதனால்தான் புலிகள் ஆசிய நாடொன்றில் சமாதானப் பேச்சுக்களை நடத்தும் திட்டத்தை உடனடியாகவே நிராகரித்துள்ளனர். அதேவேளை, ஐரோப்பாவில்தான் முழுமையாக பேச்சுக்கள் நடத்தப்படவேண்டும் என்று புலிகள் வரட்டுப்போக்குடன் இருக்கவும் இல்லை.

முதற்கட்டப் பேச்சுக்கள் ஐரோப்பாவில்தான் நடைபெற வேண்டும். அடுத்தடுத்து வேண்டுமானால் ஆசியாவில் நடத்தப்படலாம் என்பதே புலிகளின் நிலைப்பாடு.

தனது கூட்டணிக் கட்சிகளுடன் இணைந்து தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்தையும், விடுதலைப்புலிகள் இயக்கத்தையும் சர்வதேச ரீதியில் - பலவீனப்படுத்திவிட்டு சிங்களப் பேரினவாத நலன்களை நிலைநாட்டும் நோக்குடன் செயற்படும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமது நிலைப்பாட்டில் இருந்து மாறினால்தான் நிரந்தர சமாதானத்துக்கான பாதை திறக்கப்படும்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




# இருகட்சிகளும் ஒன்றிணைந்தாலே இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிட்டும்!

## ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி



கொழும்பு

சிங்கள மக்கள்தாமாக முன்வந்து இனப்பிரச்சினையைத் தீர்க்கத் தவறினால் - தமிழ் மக்கள் தனிவழியாகச் செல்வதே ஒரே வழியாக அமையும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய இரு பிரதான கட்சிகளும் ஒன்றிணைந்தே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று அன்று முதல் சுட்டிக்காட்டி வருகிறோம். இரு பிரதான கட்சிகளும் ஒன்றிணையாது இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது என்பது கடினமாகும்.

இரு கட்சிகளும் இணைந்து தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் தீர்வைக்காண முன்வரவேண்டும்.

இரு கட்சிகளும் சமாதான முயற்சியில் ஒன்றிணைவது வரவேற்கத்தக்கது. சமாதான முயற்சியை எதிர்க்கும் ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புறந்தள்ளிவிட்டு பேச்சுக்களைத் தொடங்க முன் வர வேண்டும்.

57 ஆண்டுகளாக மாறி மாறி ஆண்ட இரு பிரதான சிங்களக் கட்சிகளும் தமிழர் தரப்புடன் பல ஒப்பந்தங்களைச் செய்தன. ஆனால், எதுவும் நடைமுறைப் படுத்தப்படவில்லை. எனவே இனியாவது இதனை உணர்ந்து செயற்பட வேண்டும். சிங்கள தேசம் இனியும் தமிழர்களின் உரிமையை வழங்கத் தவறினால், தமிழர்கள் தனியாகப் பிரிந்து சென்று தமது உரிமையை வென்றெடுப்பதற்கு சர்வதேச சமூகம் அங்கீகாரம் வழங்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# நிதிப் புலனாய்வுப் பிரிவை அமைக்க இலங்கை மத்திய வங்கி ஏற்பாடு!

கொழும்பு

பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதி வழங்குவதைத் தடுக்கவும், போதைப் பொருள் வியாபாரம் மற்றும் சட்டவிரோதமான பணத்தை சட்டரீதியாக மாற்றுவதைத் தடுக்கும் நோக்குடனும் - முழுமையான அதிகாரத்துடன் கூடிய நிதிப் புலனாய்வுப் பிரிவொன்றை இலங்கையில் ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய வங்கி மேற்கொண்டு வருகின்றது.

இந்தப் பிரிவை மத்திய வங்கியினுள் அமைப்பதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளதாகவும், அதில் மத்திய வங்கியின் அதிகாரிகளும் விசேட இரகசிய பொலிஸ் குழுவினரும் அங்கம் வகிப்பரென, இரகசிய பொலிஸ் பிரிவின் பணிப்பாளர் சிசிர மென்டிஸ் தெரிவித்தார்.

இலங்கைக்குள் கையாளப்படும் எந்தவொரு நிதிக் கொடுக்கல் வாங்கல்களையும் சோதனையிடுவதற்கும், தனிப்பட்டவரின் வங்கிக் கணக்கு, முதலீடுகள், சொத்துக்கள் மற்றும் வரவுகள் என்பனவற்றைச் சோதனையிடுவதற்கும் இந்தப் புலனாய்வுப் பிரிவுக்கு முழுமையான அதிகாரத்தை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பிரிவுக்கு பொய்யான தக வல்களை வழங்கும், திட்டமிட்ட ரீதியில் தகவல்களை மறைப்பவர்களுக்கெதிராக சிறைத் தண்டனை அல்லது தண்டப் பணத்தை விதிப்பதற்குரிய சட்டங்களைத் தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் நிதிப்புலனாய்வுப் பிரிவை ஸ்தாபிப்பதற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்கு அமெரிக்காவைச் சேர்ந்த விசேட குழுவினர் கொழும்புக்கு வந்து அதிகாரிகளுடன் பல சுற்றுப் பேச்சுக் களை நடத்தியுள்ளனர்.

இந்தக் குழுவினர் கடந்த செவ்வாய்க்கிழமை பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, இரகசியப் பொலிஸ் பிரிவுப் பொறுப்பதிகாரி பிரதிப் பொலிஸ்மா அதிபர் லயனல் குணதிலக, இரகசியப் பொலிஸ் பிரிவுப் பணிப்பாளர் சிசிர மென்டிஸ் ஆகியோருடன் பேச்சுநடத்தினர். (தே)

# புன்னைக்குடா கடற்படைமுகாமை கைவிடுமாறு மீனவர் கோரிக்கை!

மட்டக்களப்பு

ஏறாவூர் - புன்னைக்குடாவில் கடற்படையினர் முகாம் அமைத்து வருவதால், அந்தப் பகுதியில் மீன்பிடித் தொழில் பாதிக்கபபடும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

கடற்படைத் தளம் அமைக்கப்பட்டால் களுவன்கேணி, புன்னைக்குடா, தளவாய் மற்றும் சவுக்கடி மீனவர்கள் அனைவரும் மீன்பிடித்தொழிலில் ஈடுபட முடியாத நிலையை எதிர்நோக்க வேண்டிவரும் என்று மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு என்ற போர்வையில் இந்தக் கடற்படை முகாம் அமைக்கப்பட்டு வருகிறது. போர்க்காலத்தில் படைத்தரப்பால் மீன்பிடித்தொழில் பாதிக்கப்பட்டது. பின்னர் சுனாமியால் உயிர், உடைமைகளை இழந்து, பொருளாதார ரீதியாக மீனவர்கள் கடும் பாதிப்புக்குள்ளாயினர்.

இந்த நிலையில் புன்னைக்குடாவில் கடற்படை முகாம் நிறுவப்படுமானால் - உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் கடல் வலயப் பாதுகாப்பை கடற்படையினர் ஏற்படுத்துவதுடன், மீனவர்களுக்குக் கட்டுப்பாடுகளும் விதிக்கப்படும்.

எனவே, புன்னைக்குடா கடற் படை முகாம் நிறுவும் திட்டத்தை கடற்படையினர் கைவிட வேண்டும் என்று இந்தப் பகுதி கரையோர மீனவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடுத்தவாரம் இந்தியா விஜயம்

கொழும்பு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 27ஆம் திகதி முதல் 30ஆம் திகதிவரை இந்தியாவுக்கான தனது உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய ஜனாதிபதி ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் அழைப்பையடுத்து இந்தியா செல்லவுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் அவரது துணைவியார் சிராந்தியும் செல்லவுள்ளார்.

வலுவான நிலையிலுள்ள இந்திய - இலங்கை உறவு, அரசியல் வர்த்தகம் மற்றும் முதலீட்டு நிலைகளில் நல்ல புரிந்துணர்வை மேலும் வலுப்படுத்தும் வகையில் மகிந்தவின் பயணம் அமையும் என அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கடந்த ஒருவார காலப்பகுதியில் நாட்டில் அச்சநிலை ஒன்று ஏற்பட்டு அதன் பதற்றம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. புதிய அரசாங்கம் பதவியேற்றதன் பின்னர், இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வில் கவனம் எடுக்காது - தமது செயற்திட்டங்களை ஒரு முகப்படுத்திக்கொண்டிருந்தபோதே, இந்தப் பதற்றநிலை தோன்றியுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகளின்

# ஐக்கிய தேசியக் கட்சி பலம்பெறும் வரை ஜனாதிபதி மகிந்தவுக்கு பொற்காலம்தான்

இந்திரஜித்

தலைவர் பிரபாகரன் தனது மாவீரர் தினஉரையில் - இலங்கையின் புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எனவே அவருக்கு வாய்ப்பை வழங்கிப்பார்ப்போம் என தெரிவித்தமை நாட்டின் அனைத்து மக்கள் மத்தியிலும் பாரிய நிம்மதிப் பெருமூச்சை ஏற்படுத்தியது.

ஏனெனில் மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட போது, அவர் ஆட்சிய மைத்தால் நாட்டில் போர் ஒன்று மீண்டும் ஏற்படும் என பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. அவரை சார்ந்திருப்போர் போரை எதிர்பார்ப்பவர்கள. எனவே அவர்களை மக்கள் தெரிவு செய்யக்கூடாது என பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால் வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் தீர்மானம் காரணமாக இந்தப் பிரசாரங்களின் பிரதிபலிப்பு இல்லாமல் போய்விட்டது. இந்த நிலையில் ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக்கு வந்தால் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகும் என எதிர்பார்த்த, ஐக்கிய இலங்கை என்ற நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்ட மக்கள் மத்தியில் பாரிய தாக்கம் ஏற்பட்டது. எனவே அவர்கள் மீண்டும் யுத்தம் வருவது உறுதி என்பதை உறுதிசெய்துக்கொண்டார்கள்.

இந்தநிலையிலேயே அவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மாவீரர்தின உரையை அவதானமாக செவிமடுத்தனர். குறிப்பாக தென்னிலங்கையின் கிராமப் பகுதியில் வாழும் சிங்கள மக்கள் புலிகளின் தலைவர் பிரபாகரனின் உரையை கேட்பதில் அதிக அக்

> **சமாதான ஏற்பாட்டாளராக செயற்படும் நோர்வே மீண்டும் முதல் படியில் இருந்து செல்ல வேண்டிய நிலை தோன்றியுள்ளது. இதிலிருந்து இலங்கையின் இறுதி சமாதானத்திற்கான பாதை இன்னும் கண்ணுக் கெட்டிய தூரத்தில் இல்லை என்பது உறுதி.**

கறை எடுத்துக்கொண்டமையும் இதன் காரணமாகவே என்பது உண்மை.

ஆனால் அவர்கள் எதிர்பார்த்ததை விடவும் மாற்று நிலை ஒன்று மாவீரர்தின உரையில் வெளிப்பட்டதை அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இது தேர்தலில் தமக்கு ஏற்பட்ட தோல்வியை போனறது என்ற கருத்து அவர்களின் பேச்சுக்களில் இருந்து வெளிப்பட்டது. இதன் உச்சக்கட்டமாக முன்னர் 'அலி - கொட்டி கிவி சும' எனக்கூறப்பட்ட (யானை - புலி ஒப்பந்தம்) போல சிவப்பு - புலி ஒப்பந்தம் ஒன்று குறித்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

புதிய அரசாங்கம் ஏற்கனவே தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஒப்பந்தம் ஒன்றை செய்துக்கொண்டுள்ளது. அதன் அடிப்படையிலேயே தமிழ் மக்களை தேர்தலில் வாக்களிக்க விடாது தமிழீழ விடுதலைப்புலிகள் தடுத்தனர் என்ற குற்றச்சாட்டும் ஐக்கிய தேசிய கட்சியின் தரப்பில் இருந்து எழுப்பப்பட்டது. இந்தக் குறறச்சாட்டின் பிரதிபலிப்புகள் மறையும் முன்னரே அவ்வாறான ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டிருப்பதற்குச் சாத்தியமில்லை என்ற நிலையை யாழ்ப்பாணத்தில் மாவீரர்தின நிகழ்வுக்கு பந்தல் அமைத்தவர்கள், கொல்லப்பட்டமை அதன் பின்னர் கிளைமோர் தாக்குதலில் பல படையினர் கொல்லப்பட்டமை போன்ற சம்பவங்கள் உறுதிப்படுத்திவிட்டன. இந்த சம்பவங்கள் இடம்பெற்றதை அடுத்து தென்னிலங்கையில் உள்ள சிங்கள மக்கள் திகைத்து நின்றனர். மீண்டும் நாட்டில் யுத்த மேகங்கள் சூழப் போகின்றவா? என்ற அச்சம் அவர்கள் மத்தியில் ஏற்படடது. இந்தச் சந்தர்ப்பத்திலேயே புதிய அரசாங்கமானது நிலைமையின மோசத்தை உணாந்து விழிபபுப் பெற்றது.

தேர்தலில் தமக்கு ஆதரவு வழங்கிய ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமய ஆகியவற்றை அழைத்துப்பேசி - நிலைமையில் மாற்றங்களை கொண்டுவர முயன்று அதில் தற்போது வரை ஓரளவு வெற்றியையும் கண்டுள்ளது. தேர்தலின்போது முழுமையாக எதிர்த்து வந்த நோர்வே ஏற்பாட்டாளர் நிலையை ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டது. இதனை கொள்கை ரீதியாக ஜே.வி.பியும், ஜாதிக ஹெல உறுமயவும் எதிர்த்தன. எனினும் இந்தியாவின் ஆசீர்வாதம் நோர் வேக்கு இருப்பதால் அவற்றால் ஒரு கட்டத்திற்கு மேலாக ஜனாதிபதிக்கு எதிர்ப்பை காட்டமுடியவில்லை.

இதேவேளை இந்த இரண்டு கட்சியினரையும் திருப்திப்படுத்தும் வகையில் மாற்றத்தை ஜனாதிபதியினால் எடுக்கமுடிந்துள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் ஏற்பாட்டாளர் நிலையை வகிக்கும் நோர்வே நாடு போர் நிறுத்த கண்காணிப்பு பணிக்கு தலைமை வகிக்கக் கூடாது என்பதே ஜனாதிபதியின் கருத்தாக அமைந்திருக்கிறது. அந்த நாட்டுடன் ஆசிய நாடு ஒன்றும் அந்த பணியில் ஈடுபடவேண்டும் என ஜனாதிபதி விரும்பினார்.இது ஜே.வி.பியையும் ஜாதிக ஹெல உறுமயவையும் மேலும் திருப்திப் படுத்தியுள்ளது என்றே கூறவேண்டும். ஜனாதிபதி இந்தக் கருத்தை இலங்கைக்கு வந்திருந்த ஜப்பானின் இலங்கைக்கான விசேட பிரதி நிதி யசூசி அகாசியிடம் வெளிப்படுத்தியுள்ளார். இந்த விடயத்தை பொறுத்தவரையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கருத்து எதுவும் இதுவரை வெளியாகவில்லை. போர் நிறுத்த உடனபாடு உரியமுறையில் செயற்படுத்தப்படுவதை தற்போதைய போர் நிறுத்தக்கண்காணிப்பு குழுவினால் உறுதிப்படுத்திக்கொள்ளும் அதிகாரத்தைக் கொண்டிருக்கவில்லை. இதற்குக் காரணம் சமாதான ஏற்பாட்டாளர் என்பதனால் சமாதான பேச்சுக்களில் பாதிப்புகள் ஏற்பட்டு விடக்கூடாது என்பதை கருத்திற் கொண்டு போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவானது நெகிழ்வுப் போக்கை கடைப்பிடித்ததாகவும் கூறப்படுகின்றது.

இதனால் போர் நிறுத்த மீறல்களை, அவர்களால் கட்டுப்படுத்த முடியாத நிலைகாணப்பட்டது. தமிழீழ விடுதலைப்புலிகளும் போர் நிறுத்தக்கண்காணிப்பு குழு அதிகாரம் பொருந்தியதாக அமைந்திருப்பதையே விரும்பினர். எனினும் போர்நிறுத்த உடன்பாடு தொடர்பான ஜனாதிபதியின் கருத்துக்கு விடுதலைப்புலிகள் தரப்பில் இருந்து எத்தகைய பிரதிபலிப்பு ஏற்படும் என்பது தெரியவில்லை. ஸ்கன்டினேவிய நாடுகளுடன் இணைந்து ஆசிய நாடு ஒன்றும் போர் நிறுத்தக்கண் காணிப்பு குழுவில் பங்கேற்கவேண் டும் என்ற நிலைப்பாட்டின் கீழ் அரசாங்கம் மாத்திரம் அந்த நாட்டை தெரிவு செய்வதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இணங்கப்போவதில்லை என்பது தெளிவு.

இந்த சூழ்நிலைக்கு மத்தியில் நோர்வே தூதுவர் கிளிநொச்சிக்கு சென்று தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளார். இது தற்சமயம் தென்னிலங்கை மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் முஸ்லிம் மக்களையும் சமாதானத்தில் நம்பிக்கை கொள்ளச் செய்துள்ளது எனக்கூறலாம். எனினும் இன்னமும் அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நல்லெண்ணம் கட்டியெழுப்பப்படவில்லை. சுமார் மூன்று வருடங்களாக இந்த நல்லெண்ணம் ஓரளவு நிலவிய போதும், அண்மையில் இடம்பெற்ற கொலைச் சம்பவங்கள் மீண்டும் இருதரப்பையும் மூன்று வருடங்களுக்கு முன்னர் உள்ள நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது. இதன் காரணமாக சமாதான ஏற்பாட்டாளராக செயற்படும் நோர்வே மீண்டும் முதல் படியில் இருந்து செல்ல



வேண்டிய நிலை தோன்றியுள்ளது. இதிலிருந்து இலங்கையின் இறுதி சமாதானத்திற்கான பாதை இன்னும் கண்ணுக்கெட்டிய தூரத்தில் இல்லை என்பது உறுதி.

இதேவேளை சமாதானத்திற்கு அப்பாற்பட்டு தென்னிலங்கையில் அரசியல் செயற்பாடுகள் மிகவும் போராட்டத்திற்கு மத்தியில் அரங்கேறிக்கொண்டிருக்கின்றன. கடந்த தேர்தலில் அளித்த வாக்குறுதிகள் அனைத்தையும் தாம் மிகவும் நேர்த்தியாக நிறைவேற்றுவதாக அரசாங்கம் இன்று கூறிவருகிறது. இதில் ஒன்றுதான் 'மஹிந்த சிந்தனை' என்ற கொள்கைப்பிரகடனத்தை எப்படியாவது நடைமுறைப் படுத்தியே தீருவது என்ற உறுதிப்பாடாகும். நாடு இன்று பாரிய பொருளாதார சிக்கலுக்குள் உழன்று கொண்டிருப்பதை அனைவரும் அறிவர். ஆனால் அதற்கு மத்தியில் தாம் வழங்கிய உறுதி மொழியை நிறைவேற்றுகிறோம் என்பதை மக்களுக்கு காட்ட வேணடிய அவசியம், அவசரம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது.

இந்த அரசாங்கத்தை பொறுத்தவரை எதிர்பார்த்ததை விடவும் குறைவாகவே எதிர்ப்புக்களைச் சந்திக்கிறது. ஐக்கிய தேசிய கட்சியும் அதன்தோழமை கட்சிகளும் ஜனாதிபதி தேர்தலில் முன்வைத்த பெரும்பாலான கொள்கைகளை இன்றைய அரசாங்கம் யதார்த்த ரீதியில் செயற்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளமை இதற்கு முக்கிய காரணமாகும். இதன் அடிப்படையிலேயே அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்திற்கு தமிழ்தேசிய கூட்டமைப்பை தவிர எந்த ஒரு கட்சியும் எதிர்ப்பு வெளியிடவில்லை என்பதை சுட்டிக்காட்டலாம். ஐக்கிய தேசிய கட்சி தமது கட்சி உட்பிரச்சினையை தீர்த்து எப்போது பலம் பெறுகிறதோ - அன்று வரை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு பொற்காலம்தான்.

மருத்துவம் பகுதி VIII

# நீரிழிவு நோயாளர்களுக்கான உணவுக் கட்டுப்பாடு தொடர்பான சில அறிவுறுத்தல்கள்

**1. வழமையான உணவு முறைகளை மாற்றியமைத்தல்**
**(Changing your diets)**

ஓர் நீரிழிவு நோயாளியினுடைய வயது, பால், நிறை, உடல், உயரம் மற்றும் அவரது அன்றாட உணவுப் பழக்கவழக்கங்களுக்கு ஏற்ற வகையில் அவரது உணவு முறைகளை மாற்றியமைக்க முடியும். இதன் மூலம் குருதியில் உள்ள குளுக்கோசின் அளவு, உடல் நிறை, குருதி கொலஸ்டிரோல் (cholesterol) மற்றும் இரத்த அமுக்கம் என்பவற்றை மிகவும் வினைத்திறனான முறையில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும்.

**2. தேவையான அளவு உணவை மட்டும் உள்ளெடுத்தல்**
**(watching Calories)**

சாதாரணமாக ஓர் நீரிழிவு நோயாளி நாள் ஒன்றுக்கு 1700-1800 கலோரி உணவை உள்ளெடுத்தல் சிறந்ததாகும். இதில் ஏறத்தாழ 720kcal காபோவைதரேற்று உணவிலிருந்தும் (180g), 540 kcal கொழுப்பு உணவிலிருந்தும் (60g), 360 kcal புரத உணவிலிருந்தும் (90g) பெறப்படல் வேண்டும். இவ்வாறாக நீரிழிவு நோயாளிகள் உட்கொள்ளும் உணவின் மொத்த கலோரிகள் கட்டுப்படுத்தப்படும் பொழுது, அவர்கள் சிறப்பான ஓர் உடல் நிறையை பேண முடிவதுடன் குருதியில் உள்ள சீனியின் அளவு, இன்சுலின் சுரக்கும் அளவு என்பவற்றையும் சீராக பேண உதவும்.

**3. உணவுக்குப்பிந்திய குருதி குளுக்கோசைப் பேணல்**
**(Maintaining the blood glucose level after meal)**

வழமையாக நாம் உட்கொள்ளும் உணவு உடலினுள் சமிபாடடைந்து அகத்துறிஞ்சப்படுவதால், குருதியில் குளுக்கோசு மட்டும் அதிகரிக்கும். இது நாம் உட்கொள்ளும் உணவின் வகை, அளவு என்பவற்றை பொறுத்து வேறுபடும். எனவே நாம் உட்கொள்ளும் உணவில் அதிகளவில் நார்ச்சத்துள்ள (fibers) உணவுகளைச் சேர்த்துக் கொள்வதன் மூலமும், கிளைசீமிக்காட்டி (glycemic index) குறைந்த உணவுகளை உட்கொள்வதன் மூலமும் குருதியில் குளுக்கோசின் அளவு திடீரென அதிகரிப்பதைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

**4. அங்கீகரிக்கப்பட்ட அளவுகளில் உணவுகளையும் போசனைப் பொருட்களையும் உள்ளெடுத்தல். (following general dietary guidelines)**

வழமையான உணவில் 55-60% காபோவைதரேற்றும், 15-20% புரதமும், 20-30% கொழுப்பும் சேர்ந்திருத்தல் வேண்டும். மிக முக்கியமாக நீரிழிவு நோயாளிகள் நிரம்பாத கொழுப்புணவுகளையே (mono & poly unsaturated fats) உள்ளெடுத்தல் வேண்டும். அத்துடன் அன்றாட உணவில் உப்பின் அளவையும் குறைவாக பாவித்தல் நன்மை பயக்கும்.

**5. சரியான நேரத்தில் சரியான அளவு உணவை உட்கொள்ளல்**
**(Achieving Consistent timing of food intake)**

சரியான நேரத் தில் சரியான அளவில் உணவை உட்கொள்வதன் மூலம் குருதியின் குளுக்கோசு அளவை சிறப்பாகப் பேண முடியும். முக்கியமாக இன்சு லின் சிகிச்சை பெறும் நீரிழிவு நோயாளர்கள் அவர்களின் இன்சுலின் சிகிச்சை அளவுக்கேற்ப (Insulin dose) அவர்களது உணவின் அளவை மாற்றிக் கொள்ள முடியும்.

**6. புகைத்தல் மற்றும் மது அருந்துதலை தவிர்த்துக்கொள்ளல்**
**(quit Smoking)**

புகைத்தலானது நீரிழிவினால் ஏற்படும் மரணவீதத்தை அதிகரிப்பதுடன் உடலில் உள்ள கொலஸ்டிரோல் அளவைக் கூட்டுகின்றது. இதன் மூலம் ஏனைய இருதய, சிறுநீரக மற்றும் நரம்பியல் சம்பந்தமான நோய்கள் ஏற்படவும் வழி வகுக்கின்றது.

**7. உடற்பயிற்சி (Exercise)**

தொடர்ச்சியான உடற்பயிற்சியானது நீரிழிவு நோயாளிகளின் குருதி குளுக்கோசு (blood suger) அளவை மிகவும் வினைத்திறனாகக் கட்டுப்படுத்துவதுடன், உடல் நிறை, இரத்த அமுக்கம், இதய இயக்கம், குருதி கொலஸ்டிரோல் அளவு என்பவற்றையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்க உதவுகின்றது.

**8. நீரிழிவு நோயாளிகளுக்கான சிபாரிசு செய்யப்பட்ட உணவு வகைகள்.**
**(Recommended diets for diabetic patients)**

அதிகாலை

❖ தேநீர்/கோப்பி ஆடை நீக்கிய அல்லது கொழுப்புச் சத்து குறைந்த பால்மாவுடன், சீனி சேர்க்காது - செயற்கைச் சுவையூட்டிகள் பாவிக்கலாம்.

❖ காலையுணவு சிவப்பு அரிசிமா, குரக்கன் மா அல்லது ஆட்டா மாவில் தயாரித்த உணவுகள்
- ◆ இடியப்பம் ◆ ரொட்டி/சப்பாத்தி
- ◆ அப்பம் ◆ பாண்
- ◆ பிட்டு ◆ பயறு/உழுந்து
- ◆ அவித்த கடலை வகை/ காய்கறி வகைகள்

❖ காலை - இடை உணவு
- ◆ தேநீர்/கோப்பி - ஆடை நீக்கியான(nonfat), சீனி அற்ற. கிறீம் கிறக்கர் (cream cracker) பிஸ்கட் அல்லது தவிட்டுடன் கூடிய கிறக்கர் பிஸ்கட்(bran cracker)
- ◆ Commercially available diabetic drinks (Resource Diabetic) மருந்தகங்களில் (Pharmacy) கிடைக்கக் கூடிய நீரிழிவுப் பானங்கள்.
- ◆ பழச்சாறு (fruit juices)

❖ மதிய உணவு
- ◆ சிவப்பு அரிசி சோறு(Red rice)
- ◆ பருப்பு/ சிறகவரை/ சோயா
- ◆ பொன்னாங்காணி/ அகத்தி/ குறிஞ்சா/ வல்லாரை/ வெண்டி
- ◆ மீன்/ கோழி இறைச்சி(தோல் நீக்கியது)
- ◆ நெத்தலி கருவாடு/ கருவாடு
- ◆ பழங்கள் - (பப்பாசி, வாழைப்பழம், அன்னாசி, அப்பிள், ஒரேஞ், பியர்ஸ்)

❖ மாலை உணவு
- ◆ தேனீர் - சீனி அற்றது/ ஆடை நீக்கியது (non fat)
- ◆ Biscuits - கிறீம் கிறக்கர் (Cream Cracker)
- ◆ சான்விச் (Sandwich) - பாணுடன்(brown bread) அவித்த காய்கறிகள்
- ◆ வர்த்தக ரீதியில் மருந்தகங்களில் (Pharmacy) கிடைக்கக் கூடிய நீரிழிவுப் பானங்கள்

❖ இரவு உணவு

சிவப்பு அரிசி மா, குரக்கன் அல்லது ஆட்டா மாவில் தயாரித்த உணவுகள்
- ◆ பாண்/ குரக்கன் பாண் மற்றும் பருப்பு/ அவித்த காய்கறிகள்
- ◆ சிவப்பு இடியப்பம்/ பிட்டு/ சப்பாத்தி/ ரொட்டி/ அப்பம்
- ◆ பருப்பு/ வெங்காய சம்பல்/ பால் சொதி
- ◆ மீன்/ நெத்தலி/ கருவாடு
- ◆ பழவகைகள் (பப்பாசி, அன்னாசி, அப்பிள், ஒரேஞ்)

இ.சிவசங்கர்
4ஆம் வருட மருத்துவ பீட மாணவன்

(தொடரும்....)

# தூத்துக்குடியில் மூன்றாவது முறையாக நேற்றுமுன்தினம் கடல் உள்வாங்கியது!



சென்னை—

தூத்துக்குடி கடல் இந்த மாதத்தில் 3 ஆவது முறையாக நேற்றுமுன்தினம் உள்வாங்கியது. இதனால் மீனவர்களும், பொதுமக்களும் மீண்டும் சுனாமி வந்துவிடுமோ என்ற அச்சத்தில் உள்ளனர்.

தூத்துக்குடி கடற்கரைச்சாலையில் உள்ள பூங்கா அருகில் நேற்றுமுன்தினம் கடல் 100 அடி தூரம் உள்வாங்கியது. இந்தப் பூங்காவில் பொதுமக்கள் எப்பொழுதும் கூட்டம் கூட்டமாக வந்து செல்வதுண்டு.

இந்த மாதத்தில் மட்டும் தூத்துக்குடி கடல் உள்வாங்குவது இது 3 ஆவது முறையாகும்.

அமாவாசை மற்றும் பௌர்ணமி போன்ற தினங்களில் கடலின் அலைகள் அதிக சீற்றத்துடன் காணப்படுவது வழக்கம். கடந்த 2 தினங்களுக்கு முன்பு அமாவாசை அன்றும் அதன் பின்பும் கடலில் அதிக சீற்றத்துடன் அலைகள் ஏற்பட்டுள்ளன.

இதனால் பூங்காவுக்கு சுற்றுலாப் பயணிகளும், உள்ளூர் மக்களும் அச்சத்துடன் சென்றுவந்தார்கள். கடந்த ஆண்டு இதே டிசெம்பர் 26 ஆம் திகதிதான் சுனாமி ஏற்பட்டது. இதில் இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் பாதிக்கப்பட்டன. குறிப்பாக கடற்கரையோர கிராமங்கள் முற்றிலுமாக அழிந்துவிட்டன. மீனவர்களின் படகுகள், மீன்பிடி வலைகள் முற்றிலு மாக சேதமடைந்தன.

இந்தச் சம்பவங்கள் எல்லாம் இன்னும் மக்கள் மனதிலிருந்து மறையவில்லை. அதற்குள் கடல் உள்வாங்குவதும் வெளிவருவதுமாக இருந்து வருகிறது.

கடந்த 10 நாட்களாக புயல், கடும் மழை, தாமிரபரணி ஆற்றில் வெள்ளம் ஆகிய இந்த நிகழ்வுகள் எல்லாம் மக்களைக் குறிப்பாக கடற்கரையோர மக்கள் மற்றும் மீனவர்களைக் கடுமையான துயரத்தில் ஆழ்த்தியுள்ளன.

# ஆப்கான் நாடாளுமன்றை தகர்ப்பதற்கு முயற்சி!

காபூல்—

ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சி கடந்த 2001 ஆம் ஆண்டு அகற்றப்பட்டது. அங்கு தற்போது ஜனாதிபதி ஹமீட் கர்சாய் தலைமையில் புதிய ஆட்சிநடைபெற்றுவருகிறது.

அமெரிக்கப் படையினர் மறுசீரமைப்புப் பணியிலும், பாதுகாப்புப் பணியிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஆனாலும், தலிபான் தீவிரவாதிகள் தொடர்ந்து ஆப்கான் அதிகாரிகள் மீதும், அமெரிக்கப் படை மீதும் தற்கொலைத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் காபூல் நகரில் நாடாளுமன்றத்தைத் தகர்க்க தலிபான் தீவிரவாதிகள் முயன்றனர். வெடிகுண்டு நிரப்பிய காரை ஒரு தலிபான் தீவிரவாதி நாடாளுமன்றக் கட்டடத்தை நோக்கி ஓட்டிவந்தார். அந்தக் காரை அமெரிக்க ரோந்துப் படையும், ஆப்கானிஸ்தான் பொலிஸாரும் தடுத்துநிறுத்தினர். உடனடியாகத் தீவிரவாதி கார்க்குண்டை வெடிக்கச்செய்தார்.

இதில் அந்தக் காரும், அமெரிக்கப் படையினர் வந்த வானும் வெடித்துச் சிதறியதில் தற்கொலைப் படை தீவிரவாதியும், 2 அமெரிக்கப் படையினரும் பலியாகினர். நாடாளுமன்றக் கட்டடம் தப்பியது.

இதேவேளை, ஆப்கானிஸ்தானில் ஜனாதிபதித் தேர்தல் விரைவில் நடைபெறவுள்ளது. இதில் சுக்ரியா பராக்சாய் என்ற பெண் போட்டியிடுகிறார்.

# புளூட்டோ கிரகத்துக்கு புதிய விண்கலம் நாஸா ஆய்வு மையம் அனுப்புகின்றது!

கேப் கனுவரால்—

அமெரிக்காவின் நாஸா விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் 'புளூட்டோ' கிரகத்துக்கு ஒரு விண்கலத்தை அனுப்பவுள்ளது.

'நியூ ஹரிசான்ஸ்' என்ற இந்த விண்கலத்தை 130 கோடி டொலர் செலவில் உருவாக்கியுள்ளது. இந்த விண் கலம் புளூட்டோ கிரகத்தின் தோற்றம், அது உருவானது எப்படி என்பதுடன், சூரியனைச் சுற்றிவரும் வேறு சில கிரகங்கள் பற்றியும் ஆய்வு நடத்தும்.

இந்த 'நியூ ஹரிசான்ஸ்' விண்கலம் 454 கிலோ நிறை உள்ளது. 'அட்லஸ்' ரொக்கெட்டில் வைத்து இந்த விண் கலம் அனுப்பப்படும். இந்த விண்கலம் கேப் க னுவரால் ரொக்கெட் தளத்துக்கு கொண்டு வரப்பட்டுவிட்டது.

அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா உட்பட 16 நாடுகள் இணைந்து விண்வெளியில் சர்வதேச ஆய்வு கூடம் அமைத்துவருகின்றன.

இந்த விண்வெளி ஆய்வுகூடத்துக்கு அமெரிக்கா மீண்டும் அடுத்த ஆண்டு மே மாதம் புதிய ரொக்கெட்டை அனுப்பும். இப்போதுள்ள டிஸ்கவரி ரொக்கெட்டின் எரிபொருள் தாங்கியில் கோளாறு ஏற்பட்டுள்ளதால் புதிய எரிபொருள் தாங்கி அமைக்கப் பட்டுவருகிறது.

சர்வதேச விண்வெளி ஆய்வு கூடத்துக்கு 2010 ஆம் ஆண்டுக்குள் 18 தடவை நாசா நிறுவனம் ரொக்கெட்டுகளை அனுப்பவுள்ளது.

# பலஸ்தீன மாநகரசபைத் தேர்தல்: ஹமாஸ் வரலாறு காணாத வெற்றி




ஜெருசலேம்—

பலஸ்தீனத்தின் மேற்குக் கரைப் பகுதியில் இடம்பெற்ற மாநகர சபைத் தேர்தலில் ஹமாஸ் அமைப்பு வரலாறு காணாத பெருவெற்றியைப் பெற்றுள்ளது.

பலஸ்தீனத் தேர்தல் திணைக்களம் வெளியிட்ட தேர்தல் முடிவுகளின்படி நப்லஸ் மாநகர சபைத் தேர்தலில் ஹமாஸ் அமைப்பு 73 வீத வாக்குகளையும், பத்தா அமைப்பு 13 வீத வாக்குகளையும் பெற்றுள்ளன.

நப்லஸ் மாநகரம் பத்தா அமைப்பின் பலம்வாய்ந்த இடமாகும். எனினும் அந்த அமைப்பில் அண்மையில் ஏற்பட்ட பிரிவினாலேயே அவர்களுக்கு தேர்தலில் பெரும் சரிவு ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்தா அமைப்பில் ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து கடந்த புதன்கிழமை அந்த அமைப்பிலிருந்து வெளியேறிய பார்கோதி தனியொரு அமைப்பை உருவாக்கியுள்ளார். இது அடுத்த மாதம் பலஸ்தீனத்தில் நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலை இலக்குவைத்தே எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




உலக நோக்கு

ஜெனின் பகுதி மாநகரசபைத் தேர்தலில் ஹமாஸ் ஏழு இடங்களையும், பத்தா ஆறு இடங்களையும் கைப்பற்றியுள்ளன. றமலா மாநகர சபைத் தேர்தலில் பத்தா ஆறு இடங்களையும், பலஸ்தீன விடுதலை முன்னணி ஆறு இடங்களையும், ஹமாஸ் மூன்று இடங்களையும் கைப்பற்றியுள்ளன.

# வீதியுலாவரும் பென்குயின் பறவைகள்



ஜப்பானின் ஹொக்கேய்டோ தீவில் இப்போது நல்ல குளிர். இது பென்குயின் பறவைகளுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. அங்குள்ள அஷாகியாமா மிருகக்காட்சிச் சாலையில் உள்ள பென்குயின் பறவைகளை தினமும் நகர வீதிகளில் உலாவர அனுமதிக்கிறார்கள். அந்த பென்குயின் பறவைகள் அன்ன நடை போடுவதைப் பொதுமக்கள், பள்ளி மாணவிகள் வேடிக்கை பார்க்கும் காட்சி.

# இராணுவ கெடுபிடிகள் அதிகரிக்குமாயின் மாணவர்கள் ஆயுதம் ஏந்தும் நிலை ஏற்படும்

## உயர் தொழில்நுட்பவியல் மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணம்—

தமிழ் மக்கள்மீதும், மாணவர்கள் மீதும் இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் சுற்றிவளைப்பு சோதனைக் கெடுபிடிகளை உடன்நிறுத்த வேண்டும். இல்லையேல் மாணவர்களும், மக்களும் இணைந்து ஆயுதம் ஏந்த வேண்டிய நிலை ஏற்படும் என இலங்கை உயர் தொழில் நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இராணுவத்தினரின் கெடுபிடிகள் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கடந்த சில வாரங்களாக யாழ். குடாநாடெங்கும் இராணுவம் தனது அராஜகத்தைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளது. இந்தச் செயற்பாட்டை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு, இவை உடன் நிறுத்தப்படவேண்டும்.

சுற்றிவளைப்புகள், கைதுகள் சித்திரவதைகள் என இராணுவ ஆக்கிரமிப்பு கரங்கள் நீண்டுகொண்டே செல்கின்றமை மாணவர் மத்தியில் என்றுமில்லாதவாறு ஒரு விரக்தியைத் தோற்றுவித்துள்ளது.

இந்த நிலைமையானது வெகு விரைவில் இராணுவ அராஜகத்திற்கு எதிரான தமது முழுமையான எதிர்ப்புணர்வைக் காட்டும். எனவே இது தொடர்பில் உரியவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இல்லையேல் மாணவர்களாகிய நாம் எமது சுதந்திரத்திற்காகவும், மக்களின் சுதந்திரத்துக்காகவும் ஆயுதமேந்தவேண்டிய நிலை உருவாகுமெனவும் உரிய தரப்புக்கு எச்சரிக்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரஷ்ய அணுமின்நிலையத்தில் பயங்கர வெடிவிபத்து!

செயின்ட் பீட்டர்ஸ்பேர்க்—

ரஷ்ய அணுமின் நிலையத்தில் தாதுப் பொருளை உருக்கும் உலையில் திடீர் வெடிவிபத்து ஏற்பட்டதில் மூன்று பேர் பலத்த தீக்காயங்களுக்கு உள்ளாகினர்.

ரஷ்ய நாட்டில் செயின் பீட்டர்ஸ் பேர்க் நகருக்கு அருகே உள்ள லெனின் கிராடில் மிகப்பெரிய அணுமின் நிலையம் உள்ளது. இந்த அணுமின் நிலையத்தின் அருகே தாதுப் பொருளை உருக்கும் உலை ஒன்று உள்ளது.

கடந்த வியாழக்கிழமை இந்த உலையில் பயங்கர வெடிவிபத்து ஏற்பட்டதில் மூன்று பேருக்கு பயங்கரத் தீக்காயங்கள் ஏற்பட்டன. இந்த வெடிவிபத்தையடுத்து அணுக்கதிர் வீச்சுக்கள் வெளியே பரவவில்லை.

இதனால், அணுமின் நிலையப் பாதுகாப்பு விதிகள் எதுவும் மீறப்படவில்லை. அணுமின் நிலையக் கருவிகளின் செயற்பாட்டுத் திறன்கள் வழக்கமான நிலையிலேயே உள்ளன. இந்த அணுமின் நிலைய இரண்டாவது பிரிவு - பராமரிப்புப் பணிகளுக்காக கடந்த ஜூலை மாதம் மூடப்பட்டதென ரஷ்ய அணுசக்தித்துறை தெரிவித்தது.

# உறவினர்கள் தொடர்புகொள்ளவும்!

வல்வெட்டித்துறை—

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் கடந்த ஒரு வாரமாகத் தங்கியிருந்து சிகிச்சைபெற்று வந்த 65 வயது மதிக்கத்தக்க நாகப்பர் வல்லிபுரம் என்ற வயோதிபர் நேற்றிரவு உயிரிழந்தார்.

தொண்டைமானாறு, செல்வச்சந்நிதி ஆலயத்தில் தங்கியிருந்த மேற்படி வயோதிபர் சுகவீனம் காரணமாக வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்தார். மேற்படி சிகிச்சை பலனளிக்காது நேற்றிரவு 11 மணிக்கு உயிரிழந்தார். இவரது சடலம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சிகிச்சை பெற வந்திருந்த வேளை தனது முகவரி மகேஸ்வரன் - துன்னாலை தெற்கு, கரவெட்டி என வழங்கியிருந்தார். மேற்படி நபரின் உறவினர்கள் இருப்பின் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி க.மயிலேறும் பெருமாள் தெரிவித்தார்.

# பரிசளிப்பு விழா!

கொக்குவில்—

தேசிய கலாசார மரபுரிமை அமைச்சால் பிரதேச மட்டங்களில் நடத்தப்பட்ட கலை இலக்கியப் போட்டிகளில் யாழ்.பிரதேசத்தில் பரிசுபெற்றவர்களுக்கு இன்று பிற்பகல் 2.30 மணிக்கு பரிசு வழங்கும் நிகழ்வு நடைபெறவிருக்கிறது.

பிரதேச செயலர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெறும் வைபவத்தில் யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி முதன்மை விருந்தினரகக் கலந்துகொள்வார்.

அதேவேளை, பிரதேச மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட மூத்த கலைஞர்களை சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வும் நடைபெறவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (206)



சிரியாவில் மழை பெய்யத் தாமதமாவதால் அந்தநாட்டு அதிபரின் வேண்டுகோளை ஏற்று மக்கள் பிரார்த்தனையில் ஈடுபடும் காட்சி.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மகளுக்கு விசா வழங்குமாறு கோரி சிறையில் முருகன் உண்ணாவிரதம்!

சென்னை —

தனது மகளுக்கு விசா அனுமதி வழங்கக்கோரி ராஜீவ் கொலை வழக்கில் தண்டனைபெற்று வேலூர் சிறையில் உள்ள முருகன் காலவரை யற்ற உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளார்.

ராஜீவ் வழக்கில் கைதாகி ஆயுள் சிறைத் தண்டனை பெற்ற நளினி மற்றும் முருகன் ஆகியோருக்கு சென்னை பூந்தமல்லி சிறையில் அரித்தா என்ற பெண்குழந்தை பிறந்தது.

தற்போது 14 வயதை எட்டியுள்ள அரித்தா தனது பெற்றோரைப் பார்க்க விரும்பினார். இலங்கையில் வசிக்கும் இவர் நீண்டகாலமாக முயற்சித்தும் இவருக்கு விசா அனுமதி இதுவரை அளிக்கப்படவில்லை.

இந்த நிலையில் தன்து மகளுக்கு விசா வழங்கும்வரை தொடர் உண்ணாவிரதத்தை வேலூர் சிறையில் முருகன் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்தார்.

# அம்பாறையில் பெரும் தேடுதல்!

அம்பாறை —

அம்பாறை நகரில் விசேட அதிரடிப் படையினரும் பொலிஸாரும் இணைந்து நேற்றுமுன்தினம் விசேட தேடுதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர். கடைகள், வாகனங்கள், மற்றும் பல்வேறு பகுதிகளிலும் இந்தத் தேடுதல் நடத்தப்பட்டதாக விசேட அதிரடிப்படை கூட்டு நடவடிக்கை தலை மையகம் தெரிவித்துள்ளது.

அம்பாறை நகரில் புலிகள் சக்தி வாய்ந்த குண்டுவெடிப்பை மேற்கொள்ளத் தயாராகி வருவதாக கிடைத்த தகவல்களையடுத்தே இந்த விசேட தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதாக பொலிஸ் தலைமையக இன்ஸ்பெக்டர் ஜெயந்த ரத்னாயக்க தெரிவித்தார்.

## அரசு - ஐ.தே.க...

விக்கிரமசிங்க அடுத்த மாதம் இரண்டாவது வாரத்திலும் இந்தியாவுக்குச் செல்லவுள்ளனர்.

இவர்கள் தமது இந்தியப் பயணத்தின்போது பிரதமர் மன்மோகன்சிங், ஜனாதிபதி அப்துல் கலாம், காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரை யாடவுள்ளனர்.

இந்தச் சந்திப்புக்களின்போது இந்தியத் தலைவர்கள் பொது இணக்கப் பாட்டுக்கு வருமாறு மகிந்த மற்றும் ரணில் ஆகியோருக்கு அழுத்தத்தைப் பிரயோகிப்பர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த வருடம் மே மாதம் நடைபெறவுள்ள தமிழ் நாட்டுத் தேர்தலை இலக்குவைத்து விடுதலைப் புலிகள் இலங்கையின் வடபகுதியில் தாக்குதல்களை நடத்துவதற்குத் தயாராகி வருவதாக இந்தியப் புலனாய்வுப் பிரிவான றோவுக்கு தகவல் கிடைத்ததை அடுத்தே இலங்கை சமாதான முயற்சிகளில் இந்தியா அதிக அக்கறையுடன் செயற்பட முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

விடுதலைப் புலிகள் யாழ்.குடாநாட்டிலுள்ள படையினருக்கான விநியோக வழிகளைத் தடைசெய்து படையினருக்கு பாரிய நெருக்கடியை ஏற்படுத்துவதற்கு திட்டமிட்டிருப்பதாக இந்திய அரசுக்கு றோ அறிக்கைகளை அளித்துள்ளது.

எனவே, இலங்கையின் சமாதான முயற்சிகளில் அனுசரணையாளர் பணி வகிக்கும் நோர்வேயின் ஆதரவைத் தொடர்ந்தும் பெற்றுக் கொள்வதன் மூலம் சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்லவேண்டுமென இந்திய அரசு இலங்கைக்குத் தெரிவித்துள்ளது. (தே)

## தமிழ்ச்செல்வன்...

தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான குழுவினருக்கும் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் குழுவினருக்கும் இடையில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையில் - துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன், விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், சமாதான செயலகத்தைச் சேர்ந்த தமிழ்விழி, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் தியாகராஜா, அரசியற்துறையைச் சேர்ந்த நவீனன் ஆகியோரும்,

ஆறுமுகம் தொண்டமானுடன் முத்து சிவலிங்கம், ஆர்.யோகராஜன், வி.இராதாகிருஷ்ணன், எம்.சச்சிதானந்தன், து.மதியுகராஜா, கே.கிருஷ்ணமூர்த்தி, அ.கணேசிங், மற்றும் தேவி ஆகியோரும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக -

புதிய ஜனாதிபதி பதவிக்கு வந்த சூழலில் தமிழ் மக்கள் இடையே காணப்படுகின்ற பிரச்சினைகள் பற்றியும், இன்றைய அரசியல் நிலவரம் பற்றியும் கலந்துரையாடினோம்.

கேள்வி : தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றுசேரவேண்டுமென்று ஒரு புதிய முயற்சியை மேற்கொண்டிருக்கிறீர்கள். இந்தக் காலகட்டத்தில் ஏன் நீங்கள் மேற்கொள்கிறீர்கள்?

பதில் : எப்போதோ ஒருநாள் இந்த முயற்சி நடைபெறவேண்டும். யாராவது ஒருவர் தொடங்கத்தான் வேண்டும். அதனடிப்படையில் நாம் தொடங்கியுள்ளோம்.

கேள்வி : என்ன தேவை தற்போது உள்ளது?

பதில் : சிறுபான்மையினராகிய தமிழ்க் கட்சிகள் ஒன்றாக இருப்பது உங்களுக்குப் பிடிக்கவில்லையா?

கேள்வி : இந்த நேரத்தில் தொடங்க வேண்டிய தேவை என்ன?

பதில் : முன்னர் ஒருவரும் என்னிடத்தில் கேட்கவில்லை. நாங்கள்தான் கேட்கிறோம்.

கேள்வி : மலையகத்தில் இருந்து ஒரு கட்சிவந்து மற்ற இடங்களிலுமுள்ள தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைக்க வேண்டிய அரசியல் தேவையேதும் உள்ளதா?

பதில் : அரசியல் தேவையென்று எதுவுமில்லை. தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். சிங்கள மக்கள் ஒன்றிணைந்து செயற்படும் நிலையில் தமிழ் மக்கள் ஒன்றிணைந்து செயற்படக் கூடாதா?

கேள்வி : முன்னர் ஒருமுறை மலையகப் பிரச்சினை வேறு வடக்கு - கிழக்கு பிரச்சினை வேறு என்று கூறியிருக்கிறீர்களே?

பதில் : மலையகப் பிரச்சினைகள் வேறு. வடக்கு - கிழக்கு பிரச்சினைகள் வேறு. இப்பிரச்சினைகள் பற்றி பின்னர் பார்க்கலாம். தற்போது தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்.

சிங்கள இனவாத அரசாங்கத்தில் சிங்களவர்கள் ஒன்றாக இருக்கும் நிலையில் ஏன் தமிழ்க் கட்சிகள் ஒன்றாக இணைந்து செயற்படமுடியாது. தமிழர்களுக்கு என ஒரு பொதுவான கட்சியிருக்கலாம்தானே?

கேள்வி : இந்த ஒற்றுமையின் மூலம் எதனைச் சாதிக்க விரும்புகிறீர்கள்?

பதில் : மானத்தோடும், மரியாதையோடும் வாழலாம் என்பதைத்தான்.

கேள்வி : இப்போது அப்படி வாழவில்லையா?

பதில் : அரைகுறையாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். முழுமையாக வாழலாம் என்பதுதான்.

கேள்வி : ஏனைய கட்சிகளோடு எப்படி நீங்கள் கூட்டுச் சேரப்போகிறீர்கள்?

பதில் : யாரையும் பிரித்து வைத்துச் செயற்படப் போவதில்லை.

கேள்வி : இந்தச் சந்திப்பில் ஏதாவது தீர்மானங்கள் எடுக்கப்பட்டனவா?

பதில் : பொறுத்திருந்து பாருங்கள் என செய்தியாளர்களின் கேள்விகளுக்கு தொண்டமான் பதிலளித்தார்.

FedEx Express அனுசரணையுடன் FedEx Express
திருமுருகன் கொம் நெற்றின் பரிசு மழை
05.12.2005 முதல் 15.01.2006 வரை
எமது நிறுவனத்தின் மூலம் நத்தார், புதுவருட, பொங்கல் தினங்களை முன்னிட்டு உங்கள் உறவுகளுக்கு துரித கதியில் கடிதங்கள், உணவு, உடை, V.D.O பிரதி மற்றும் அன்பளிப்புப் பொருள்களை அனுப்புவோரின் பற்றுச்சீட்டு இலக்கங்கள் குலுக்கலின் மூலம் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு பெறுமதிவாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.
முதலாம் பரிசு - தங்கநாணயம் மற்றும் பெறுமதிவாய்ந்த 10 ஆறுதல் பரிசுகள்
மற்றும் 20% கழிவு
சுவிஸ்லாந்துக்கான 5kg பொதி ஒன்றிற்கு 1kg க்கான கட்டணம் 650/=
லண்டனுக்கான 5kg பொதி ஒன்றிற்கு 1kg க்கான கட்டணம் 500/=
ஐரோப்பிய நாடுகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 7835 Fax - 021 222 7836
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். Tel - 021 222 7560 Fax - 021 222 7310
36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. Tel - 021 226 4252 Fax - 021 226 4253
குகன் தொலைத்தொடர்பகம் 106, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 2027 Fax - 021 222 2993
வாடிக்கையாளர்களுக்காக தினசரி காலை 7.00 மணிமுதல் இரவு 10.00 மணிவரை எமது சேவை நடைபெறுகின்றது.
யாழ். நகரில் இவை அனைத்தும் திருமுருகன் கொம் நெற்றில் மட்டும்

# புங்குடுதீவு யுவதி படுகொலைக்கு விழிப்புணர்வுக் கழகம் கண்டனம்

யாழ்ப்பாணம் —

புங்குடுதீவில் இளையதம்பி தர்சினி என்ற இளம்பெண்ணைக் கடற்படை யினர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி படுகொலை செய்த சம்பவத்தை தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக அந்தக் கழகம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

படையினரின் பூரண கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் கடந்த காலப்பகுதியில் சுண்டிக்குளி மாணவி கிருஷாந்தி, புங்குடுதீவு சாரதாம்பாள், கோண்டாவில் ரஜினி போன்ற எமது பெண்களை சிங்களப் படைகள் தமது காடைத் தனத்துக்குப் பலிகொண்டது போல - புங்குடுதீவு 7 ஆம் வட்டாரம் மடத்துவெளியைச் சேர்ந்த 20 வயதுடைய இளையதம்பி தர்சினியையும் பலிகொண்டுள்ளது.

தனது வீட்டிலிருந்து அயலில் உள்ள தனது பெரியதாயின் வீட்டுக்குச் சென்றுவரும் தர்சினி - நேற்று முன்தினம் வீடு திரும்பவில்லை. இவரது வீடு கடற்படையினரின் உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் அமைந்துள்ளது.

நேற்றுமுன்தினம் பெரியதாயின் வீட்டுக்குச் சென்ற தர்சினி சடலமாகக் கடற்படையினரின் முகாமுக்கு அருகில் உள்ள கிணற்றிலிருந்து மீட்கப் பட்டுள்ளார்.

குடாநாட்டில் எமது மக்கள்மீது இராணுவம் மேற்கொண்டுவரும் அடாவடித்தனங்கள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. அந்த வகையில் புங்குடுதீவில் கடற்படையினர் தமது அராஜகத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

இந்தக் கொலைக்கு கடற்படையே பொறுப்பு. இவ்வாறான நடவடிக்கைகளை இராணுவம் உடன் நிறுத்த வேண்டும். தமிழ் மக்களாகிய நாம் இதனை தொடர்ந்தும் பொறுத்துக் கொண்டிருக்கமுடியாது. இந்தப் படுகொலைச் சம்பவத்தை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கெருடாவில்...

காத்திருக்க வேண்டிய அவலம் ஏற்பட்டது. அத்துடன் அந்த வீதியூடாகப் பயணித்தவர்கள் பெரும் பீதியடைந்தனர்.

இதேவேளை - பருத்தித்துறை மற்றும் பலாலி வீதிகளில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருக்கும் பெருந்தொகையான படையினர் - இராணுவ வாகனங்கள் வருகின்ற வேளையில் மக்களின் போக்குவரத்தை இடைநிறுத்தி தமது வாகனங்கள் சென்ற பின்னரே பயணிக்க அனுமதிக்கின்றனர்.

படையினரின் இவ்வாறான செயல்களினால் தமது தேவைகளை நிறைவுசெய்துகொள்வதில் பெரும் சிக்கல்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

## புங்குடுதீவில்...

தொடர்பு அலுவலகத்துக்கும் அண்மையிலுள்ள முருகன் கோவில் கிணற்றில் இருந்து நேற்றுமாலை காணாமற்போன இளம்பெண்ணின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்ட போதும் நேற்றிரவு 7.00 மணிவரை சடலம் கிணற்றிலிருந்து மீட்கப்படவில்லையெனத் தெரியவருகிறது.

இந்தச் சம்பவத்தையடுத்து புங்குடுதீவில் பெரும் பதற்றமும் பீதியும் பரபரப்பும் உருவாகியுள்ளது.

## வட - கிழக்கு...

மீற்றர் தொலைவில் நிலைகொண்டிருந்தது. இது மேலும் தீவிரமடைந்து சூறாவளியாக உருவாகக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்கள காலநிலை நிபுணர் கே.லோகேஸ்வரன் நேற்றுமாலை தெரிவித்தார்.

இந்த சூறாவளி திருகோணமலைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையாக கிழக்குக் கரையை இன்று காலை கடக்கக்கூடும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் ஊடாக மன்னார் முதல் மட்டக்களப்பு வரையான கரையோரத்தை அண்டிய கடற்கரைப் பிரதேசங்களில் மணித்தியாலத்துக்கு 80 - 100 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும்.

அத்துடன், அடுத்த 36 மணித்தியாலத் துக்குள் பலத்த காற்று வீசுவதுடன், இடையிடையே மழை பெய்யும். மீனவர்கள் மற்றும் கப்பல்துறையினர் மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் செல்வதைத் தவிர்க்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

வடக்கு - கிழக்கு - வடமத்திய மாகாணங்களில் இடையிடையே மழையும் 80 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்றும் வீசும்.

மேல், வடமேல், மத்திய, ஊவா, சப்ரகமுவ மாகாணங்களில் ஓரளவு பலத்த காற்றுடன்கூடிய மழை பெய்யும்.

மட்டக்களப்புக்கு வடக்கே தாழ்ந்த கடற்கரைப் பிரதேசங்களில் கடல் அலைகள் உட்புகலாம் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது.

## அன்னை...

தாவது -

தமிழ் யுவதிகளையும் தாய்மார்களையும் இராணுவம், கடற்படை மற்றும் பொலிஸைச் சேர்ந்த காம வெறியர்கள் தமது பாலியல் இம்சைகளைத் தீர்ப்பதற்காக மிகக் கொடூரமான இது போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு படுகொலை புரிகின்ற சம்பவம் தொடர்ந்த வண்ணமேயுள்ளது.

புங்குடுதீவுப் பகுதியில் போர்க்காலத்தில் கடற்படைச் சிப்பாய்கள் சாரதாம்பாள் என்ற பெண்மணியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்திப் படுகொலை செய்து, காவோலையால் மூடிவிட்டனர்.

இன்றைய சமாதான காலத்தில் அதே மண்ணில் அதே முறையில் படுகொலைசெய்த பின்னர் யுவதியை கிணற்றுக்குள் வீசியிருக்கிறார்கள். உலகம் முழுவதும் பெண்கள் உரிமை குறித்துப் பேசிக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் எமது பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை எந்தவொரு உலக நாடும் கண்டுகொள்ளாமல் இருப்பது எமக்கு மிகுந்த வேதனையைத் தருகிறது.

தொடர்ச்சியாக அதாவது இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிக்குள் வாழும் எமது பெண்களை இராணுவம் எந்த நேரமும் எதையும் செய்துவிடலாம் என்ற அச்ச நிலையே காணப்படுகிறது.

செம்மணியில் கிருஷாந்தி, புங்குடுதீவில் சாரதாம்பாள், கோண்டாவிலில் ரஜனி, கிழக்கு மாகாணத்தில் எத்தனையோ பெண்கள் அண்மைக் காலங்களில், அல்லைப் பிட்டியில், மன்னாரில் கடந்த சில வாரங்களுக்கு முன் மல்லபுரம் பகுதியில் நேற்று முன்தினம் எழுதுமட்டுவாழில், நேற்று மீண்டும் புங்குடுதீவில் நாளையும் எங்கோ ஓர் இடத்தில் பாலியல் வல்லுறவு முயற்சி அல்லது பாலியல் வல்லுறவின் பின் படுகொலையோ இடம் பெறலாம்.

இலங்கை இராணுவம் ஆக்கிரமித்துள்ள எமது மண்ணில் வாழும் பெண்கள் மீது காட்டுமிராண்டித்தனமான வெளிப்படையாக மேற்கொண்டு வரும் நிலையை நாம் வன்மையாகக் கண்டிக்கும் அதேவேளை தொடர்ந்தும் நாம் மௌனிகளாக இருக்கப் போவதில்லை என்பதையும், வீதிகளில் இறங்கி நாம் நீதிகேட்கத் தயாராகிவிட்டோம் என்பதையும் தெரியப் படுத்துகின்றோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்

## கதிரவேலு நல்லம்மா

கல்வயலைச் சேர்ந்த கதிரவேலு நல்லம்மா அவர்கள் 17.12.2005 சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்துவிட்டார். இவர் காலஞ்சென்ற சி.கதிரவேலு (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், பாலசுப்பிரமணியம் (இளைப்பாறிய இலிகிதர் கூட்டுறவு திணைக்களம் - யாழ்ப்பாணம்), முருகையா (ஆங்கில ஆசிரியர் - மட்டுவில் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பா.கமலாதேவி, மு.இராசாதேவி, க.விமலாதேவி, இ.சிவயோகராணி (ஆசிரியை), சொர்ணா அம்பாள் ஆகியோரின் அன்பு மாமியாரும், வா.சிதம்பரப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சி.விநாசித்தம்பி (சங்கீதபூஷணம்) காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்பு மைத்துனியும், வி.பொன்னம்பலம் அவர்களின் பெரியதாயாரும் க.கனகசபை (உத்தரவுபெற்ற நில அளவையாளர்), இ.இரத்தினேஸ்வரன் (களஞ்சியப் பொறுப்பாளர்) ஆகியோரின் அன்பு சிறியதாயாரும், நிலாம்பரி, நிலாங்கனி, நிலாம்பரன், நிலாஜி, அம்பிகைபாலன் (கணக்காளர்), முருகவேள் (பொறியியலாளர்), சிறிஸ்கந்தவேள் (பொறியியலாளர்), இளங்கோவேள் (யாழ்.இந்துக்கல்லூரி), எழில்வேள் (யாழ்.இந்துக்கல்லூரி), சிவேஸ்வரன், கிருஸ்னாகினி (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்பு பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயத்திற்கு அருகில் உள்ள அன்னாரின் மகனின் வீட்டில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள்
(க.பாலசுப்பிரமணியம்)
(க.முருகையா)

மீசாலை வடக்கு,
மீசாலை. (சி/2138)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 18.12.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.